அக்டோபர் 2022

# கொலம்பஸ் தமிழ்

# சாரல்

## இலையுதிர் கால இதழ்







thank you

# Dadu's
Bakery & Sweets

# NAWABI
Hyderabad house
Biryani Place




Trinethra
Super Market

## உள்ளடக்கம்

தலையங்கம்……………………………………………………2

தேடிச் சேர்த்த பணம்…………………………………………….4

குழந்தைகளும் மனஅழுத்தமும்…………………………….6

தண்ணீர்..தண்ணீர்……………………………………………….9

மாலதி என்றொரு தாய் ……………………………………….10

தமிழ் நயம் ……………………………………………………… .13

கொலம்பஸ் தமிழ்ச் சங்க செய்திகள் ……………………15

பயணங்கள் முடிவதில்லை ………………………………….16

சமைக்க, ருசிக்க ……………………………………………….25

சதுரங்கத்தின் ராஜா பிரக்ஞானந்தா ……………………27

தமிழர் இனம் ……………………………………………………29

சித்திரம்…………………………………………………………….30

அறிவீர் ! அறிவீர் …………………………………………….32

இறைவன்………………………………………………………….33

தமிழ்ச் சங்க நிர்வாகக்குழு…………………………………38

சாரல் குழு…………………………………………………………39

சரிபார்த்தோர் குழு………………………………………………40

# தலையங்கம்

சாரல் வாசகர்கள் அனைவருக்கும் அன்பு வணக்கம்!!!

கோடைகாலம் முடிந்து இலையுதிர் காலம் தொடங்கி விட்டது. சென்ற மூன்றாண்டுகளில் பெற்றோர், உறவினர், நண்பர்கள் என நெருக்கமானவர்களை சந்திக்க முடியாமல் தவித்த நம்மில் பலர், கொரோனா தொற்று பயமின்றி தாய் நாட்டிற்கு சென்று கோடை விடுமுறை நாட்களைக் கழித்து வந்ததைக் காண மகிழ்ச்சியாக இருந்தது. குழந்தைகளும் கடந்த வருடங்களில் கடைப்பிடித்த கட்டுபாடுகளைக் களைந்து சுதந்திர உணர்வுடன் உற்சாகமாக கோடை விடுமுறை கொண்டாட்டங்களை முடித்து பள்ளி, கல்லூரி என ஒரு புதிய அத்தியாயத்தை துவங்கி விட்டார்கள்.

'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' என ஔவையின் அமுத மொழிக்கேற்ப கடல் கடந்து வாய்ப்புகளைத் தேடி வந்த நமக்கு ஒரு இணைப்புப் பாலமாக இருப்பது நம் தாய்மொழி தான். சொந்தபந்தங்களை விட்டு தொலைதூரத்தில் இருக்கும் நமக்கு சமூக நிகழ்வுகளிலோ, பொது இடங்களிலோ தமிழ் பேசும் மனிதர்களைக் கண்டால் நம்மையறியாமல் ஒரு நட்புணர்வு தோன்றுகிறது. எங்கேயாவது தமிழ்த்தாய் வாழ்த்து ஒலிக்கக் கேட்கும் போது இனம்புரியாத ஒரு சிலிர்ப்பு ஏற்படுகிறது. இந்தத் தமிழ்ப்பற்று, தாய்மொழிப் பெருமையெல்லாம் நம்மோடு முடிந்து விட்டதா? நம் அடுத்த தலைமுறையினரும் இதை உணர்ந்து கொள்ள வழிவகை செய்கிறோமா?

இன்று இங்கு பள்ளி, கல்லூரி என படித்துக் கொண்டிருக்கும் இளைஞர்கள், குழந்தைகள் பெரும்பாலானோர் அமெரிக்காவில் பிறந்தவர்களாகவோ, இல்லை சிறு வயதிலேயே இங்கு வந்தவர்களாகவோ இருக்கிறார்கள். பள்ளிக்கூடம், நட்பு வட்டாரம், பொதுவெளி என எல்லா இடங்களிலும் ஆங்கிலம் மட்டுமே பயன்படுத்தும் சூழ்நிலையில் வாழும் இவர்களுக்கு வீட்டிற்குள் தமிழ் பேசும் சூழலை ஏற்படுத்தி கொடுப்பது பெற்றோர்களாக நம் தலையாய கடமையாகும்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
        இனிதாவது எங்கும் காணோம்,
பாமரராய் விலங்குகளாய், உலகனைத்தும்
        இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு
        வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
        பரவும்வகை செய்தல் வேண்டும்.

இது மகாகவியின் வரிகள். தமிழ் மொழியின் இனிமையை உலகெங்கும் பரப்புவதற்கு நம் இளைய சமுதாயத்தினரின் பங்களிப்பு மிக இன்றிமையாத ஒன்றாகும். தாயைப் போன்றே தாய் மொழியும் சிறப்பு வாய்ந்தது. தாய்மொழியைக் கற்றறிந்தால் அவர்களால் எந்த மொழியிலும், தங்கள் கருத்துகளை ஆழமாகச் சொல்லி முத்திரை பதிக்க முடியும் என்பது யதார்த்தம். ஒரு சமூகத்தின் பாரம்பரியம் மட்டும் பண்பாட்டை நிலைநிறுத்த வேண்டுமெனில், அதன் தாய்மொழியைக் காப்பது மிகவும் அவசியம். குழந்தைகளிடம் வீட்டில் தமிழில் பேசுங்கள். அவர்களையும் தமிழிலேயே பேச ஊக்கப்படுத்துங்கள். தமிழ் புத்தகங்களை வாசிக்க பழக்குங்கள். சமூக நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் ஆர்வத்தை உருவாக்குங்கள்.

ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒரு சொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!

என்றார் பாரதி. அதற்கேற்ப தாயகத்தை விட்டு புலம்பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகளை ஒன்றிணைத்து தமிழ்மழை பொழிந்து வருகிறது நம் சாரல் இதழ். சாரல் இதழுக்கு காலாண்டு தோறும் மிக ஆர்வத்துடன் கதை, கவிதை, கட்டுரை, ஓவியங்கள் என தங்கள் படைப்புகளை அனுப்பி வரும் அனைத்து படைப்பாளிகளுக்கும், அந்த படைப்புகளை ரசித்து படித்து ஊக்கமளித்து வரும் சாரல் வாசகர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!

என்றும் அன்புடன்,



ஷைனி அஜி வேலுசாமி

## தேடிச் சேர்த்த பணம்

யூத வாய்மொழிக் கதைகளில் ஒன்று மாயப் பை ஒன்றைப் பற்றி பேசுகிறது.

சாலையில் மாயப் பை ஒன்றைக் கண்டெடுக்கிறான் ஒரு ஏழை. அந்த மாயப் பையில் ஒரே ஒரு தங்க நாணயம் இருக்கிறது. அதை வெளியே எடுக்கும்போது ஒரு குரல் கேட்கிறது:

''இது ஒரு மாயப் பை. இதில் உள்ள தங்க நாணயத்தை நீ எடுத்துக்கொண்டால் உடனே இன்னொரு புதிய நாணயம் உருவாகிவிடும். எத்தனை முறை நாணயத்தை எடுத்தாலும் நாணயங்கள் புதிதாக வந்து கொண்டேதான் இருக்கும். ஆனால், நாணயத்தைச் செலவழிக்க நினைத்தால் அந்த மாயப் பையை ஆற்றில் தூக்கி எறிந்துவிட வேண்டும். அந்த மாயப் பை ஒரு மீனாக உருமாறி மறையும். அதன் பிறகே நாணயத்தை செலவழிக்க முடியும். ஒருவேளை அதற்கு முன்பு செலவழிக்க முயன்றால் தங்க காசு சாம்பலாகிவிடும்'' என்றது அந்தக் குரல்.

'ச்சே... தங்கக் காசு கிடைத்தும் செலவழிக்க முடியவில்லையே...' என்று அந்த ஏழைக்கு ஆதங்கம்.

அவன் அந்த மாயப் பையில் இருந்து வேண்டுமான அளவு தங்க நாணயங்களை எடுத்தெடுத்து சேகரிக்கத் தொடங்கினான். பெட்டி பெட்டியாக தங்க நாணயம் சேர்ந்த போதும் அந்த மாயப் பையை ஆற்றில் தூக்கி எறிய மனம் வரவில்லை. ஆனால் அதில் இருந்து எடுக்கும் நாணயத்தை அவன் செலவழிக்கவே இல்லை. தினமும் வீதியில் யாசகம் செய்து, அதன் மூலம் கிடைக்கும் பணத்தில்தான் வாழ்ந்து வந்தான். தன் வாழ்நாளின் இறுதிவரை அவனால் அந்த மாயப் பையைத் தூக்கி எறிந்துவிட்டு, சேகரித்த நாணயங்கள் போதும் என நினைக்கவே முடியவில்லை.

முடிவில் ஒருநாள் அந்த மனிதன் இறந்து போனான். அவன் வீட்டை சோதித்த உறவினர்கள், 'இவ்வளவு தங்க நாணயங்களை சேகரித்து வைத்தவன், எதற்காக பிச்சைக்காரனைப் போல வாழ்ந்தான்?' என்பது புரியாமல் திகைத்தார்கள்.



இந்தக் கதையில் வரும் மனிதனின் நிலைதான் இன்றைய நவீன வாழ்க்கை முறையும். பணம்... பணம்... எனத் தேடி சேகரித்து, அதைக் கொண்டு உரியமுறையில் வாழத் தெரியாமல், நோயும் அவதியும் பற்றிக்கொள்ள அற்ப ஆயுளில் வாழ்க்கையை முடித்துக் கொள்கிறார்கள்.

சாலையில் பலர்கூடி வேடிக்கை பார்க்க, தனது வாய்க்குள் நீண்ட கத்தியை விட்டு விழுங்கி காட்டுபவன்... பணம் சம்பாதிக்கவே அச்செயலை செய்து காட்டுகிறான். பணம், மனிதர்களைத் துரத்துகிறது. பணம், மனித மனதை உருமாற்றுகிறது. பணம், துட்டு, காசு என்பது வெறும் சொற்கள் இல்லை. நம் வாழ்க்கைமுறையின் அடையாளம்.

பணத்தை அடைவதும் காப்பாற்றுவதும் எளிதில்லை. பணம், எப்போதும் பிரச்சனையைக் கூட்டிக் கொண்டுதான் வரும். பணம், வேகமாக கைவிட்டுப் போய்விடும். பிரச்சினைகள் எளிதில் போய்விடாது. இதுவே உலகம் காட்டும் உண்மை.

**படித்ததில் பிடித்தது**

கண்ணீர் –
கண்களை நம்பாதே
இன்பத்திலும் துன்பத்திலும்
அதன் பதில் ஒன்று தான்
கண்ணீர்

**--மிருணாளினி**



## குழந்தைகளும் மனஅழுத்தமும்



**மதிவதனி சாந்தி-ஈஸ்வரன்**

மன அழுத்தம் என்பது மனிதன் அல்லது விலங்கு உயிரினத்தில் உண்மையாகவோ அல்லது கற்பனையாகவோ, உடல் ரீதியாக அல்லது மன ரீதியாக ஏற்படும் தாக்கங்களுக்கு சரியான முறையில் எதிர்ச் செயலை செய்ய முடியாத நிலை தோன்றுவதன் தொடர்விளைவு அல்லது பின்விளைவாகும்.



இந்த மன அழுத்தம் என்ற பதம் உயிரியல் மற்றும் உளவியல் அடிப்படையில் முதலில் 1930 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டது. இருப்பினும் அண்மைக் காலங்களில் இதுபற்றி மிக அதிகமாகப் பேசப்பட்டு வருகிறது. மன அழுத்தத்தின் அறிகுறிகள் உடல், மன, பழக்கவழக்கம் தொடர்பில் மாற்றங்களை ஏற்படுத்தும்.

அதிலும் குறிப்பாக இந்த சில ஆண்டுகளில் மன அழுத்தம் குழந்தைகளை அதிக அளவில் பாதிக்கின்றது. நம்முடைய குழந்தை பருவத்தில் இந்த வார்த்தைகள் எல்லாம் பெரிதும் புழக்கத்தில் இருந்ததில்லை. அம்மா அடித்தால் அரவணைக்க பாட்டி, தாத்தா இருந்தனர். அம்மா, அப்பாக்குள் சண்டை இருந்தால் அதை மறந்து நம்மை சிரிக்க வைக்க பெரியம்மா, பெரியப்பா, சித்தி, சித்தப்பா, என்று சுற்றிலும் உறவுகள் இருந்தது. அந்த கூட்டுகுடும்ப வழக்கம் மறைந்து அனைவரும் தனித்தீவாக மாறிபோனதின் விளைவு வயது வித்தியாசம் இல்லாமல் அனைவரையும் இந்த மன அழுத்தம் தாக்குகிறது.

குழந்தைகளுக்கு குடும்ப சூழ்நிலை, வீட்டு வன்முறை, புறக்கணிப்பு, பெரியவர்களிடம் இருந்து போதுமான ஆதரவு இல்லாமை, மற்ற குழந்தைகளோடு ஒப்பிடுவது, மதிப்பெண்ணிற்கான ஓட்டம் என்று மன அழுத்ததிற்கான காரணங்களை பட்டியலிடலாம். இதன் விளைவாக, அவர்களின் மூளை கட்டமைப்பு உண்மையில் மாற்றப்பட்டு அவர்களின் உறுப்பு அமைப்புகள் பலவீனமடைகின்றன.

இந்த வயசுல என்ன மன அழுத்தம், நாங்க எல்லாம் அந்த காலத்துல படிக்கலையா என்ற வாதங்கள் இன்றைய காலகட்டத்துக்கு ஒத்துவராது. நம் குழந்தை பருவம் வேறு, ஒவ்வொன்றையும் நின்று நிதானமாக ரசித்து, மகிழ்ந்து வளர்ந்த தலைமுறை நம்முடையது.

இன்று இந்த குழந்தைகள் வாழ்வில் அனைத்தும் வேகம், அலுவலகம் கிளம்பும் அம்மா, அப்பாவின் பரபரப்பு, பள்ளி வேனுக்கு நேரமாகிடும் என்று அவசரம், தொடர் வகுப்புகள், பாடத்தை நேரத்தில் முடிக்க வேண்டுமென்று வேகமாக நடத்தும் ஆசிரியர்கள், பள்ளி முடித்து டியூஷன், பாட்டு கிளாஸ், நடனம், நீச்சல், ஏதோ ஒரு விளையாட்டு கிளாஸ் இப்படி அவர்களை எந்த நேரமும் பரபரப்பாக வைத்திருக்கிறோம்.

அனைத்தும் முடித்து அவர்களுக்கு கிடைக்கும் கொஞ்ச நேரத்திலும் நமக்கு அவர்களோடு பேச நேரம் இருப்பதில்லை எனவே அந்த நேரத்தை போன் எடுத்துக்கொள்கிறது அதில் விளையாடும் விளையாட்டுகளும், பார்க்கும் வீடியோக்களும் அவர்களுக்கு வேறு விதமான பாதிப்புகளை கொடுக்கிறது. கடந்த இரு ஆண்டுகளாக வீட்டிலேயே கல்வி அவர்களின் அழுத்தத்தை அதிகப்படுத்தி இருக்கிறது.

அனைத்திலும் முக்கியமானது தேர்வு சமயங்களில் அவர்களுக்கு ஏற்படும் மன அழுத்தம். தேர்வு முடிவுகள் எப்பவும் எனக்கு பயத்தை கொடுக்கும், நான் படிச்சுட்டு இருக்கவரைக்கும் முடிவுகள் எப்படி வருமோங்குற பயம், ஆனா இப்ப தேர்வுமுடிவுகளுக்கு அப்புறம் வரும் தற்கொலை செய்திகள் பற்றிய பயம். நம் குழந்தைகள் நமக்கு பயந்து தற்கொலை முடிவுக்கு போறாங்க, இதுக்கு முழு பொறுப்பும் நாம் தான். மதிப்பெண் முக்கியமானதுதான் ஆனா அதுவே வாழ்க்கை கிடையாது. சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும். சுவரை இடிச்சுட்டு சித்திரம் ஒழுங்கா வரலைனா எப்படி. பிள்ளைகளோட எல்லா நிலையிலும் கூட இருக்க வேண்டியது நம்மோட கடமை.

கலகலப்பாக இருக்கும் குழந்தை தீடீரென அமைதியாக இருந்தால், சரியாக சாப்பிடாமல், எதிலும் நாட்டம் இல்லாமல், வயதுக்குரிய துரு துருப்பு இல்லாமல் இருந்தால் உங்கள் குழந்தை ஏதோ அழுத்தத்தை உள்ளே வைத்துக்கொண்டு சொல்ல முடியாமல் அல்லது சொல்லத் தெரியாமல் இருக்கிறது என்று அர்த்தம்.

அவர்களோடு அமர்ந்து பேசுங்கள், தினம் பள்ளியில் நடப்பதை கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள், தேர்வு சமயங்களில் மதிப்பெண்கள் பற்றியே பேசாமல் அவர்களுக்கு நம்பிக்கை கொடுங்கள். மதிப்பெண் வெறும் பயணசீட்டு அது எதிர்காலத்துக்கான கதவை திறக்கும் சாவி அவ்வளவுதான், ஆனா உங்க பிள்ளைகளின் திறமை தான் அவர்களுடன் பயணப்படும் என்பதை புரியவையுங்கள்.

நாங்க எதுவுமே கேட்கக் கூடாதா, நல்லா படிக்கச் சொன்னா ஒரு தப்பா என்று கேட்கும் உங்கள் ஆதங்கம் புரிகிறது. கேட்க வேண்டாம் என்று சொல்லவில்லை கேட்கும் விதம் முக்கியம். மதிப்பெண் குறைவா எடுத்துட்டா நீ என் பிள்ளையேயில்லை என்று சொல்லி திட்டுற பெற்றோர்கள் உண்டு, அந்த மாதிரி வார்த்தைகள் எதிர்மறை எண்ணங்களை விளைவிக்கும். எப்படி இருக்க வேண்டும் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்றெல்லாம் அறிவுரை கூறுவதற்கு முன்பு எது நடந்தாலும் என்ன தவறு செய்திருந்தாலும் உன்னை அரவணைக்க உன் குடும்பம் என்றென்றும் உன்னோடு உண்டு

என்ற நம்பிக்கையை அவர்களுக்குக் கொடுங்கள்.

பெற்றோரின் அரவணைப்பும், அன்பும் தான் குழந்தைகளை மன அழுத்தத்தில் இருந்து விலக்கி வைக்கும். உங்கள் அனுபவத்தில் குழந்தைகளின் மன அழுத்தத்தை பற்றிய கருத்துக்களை எங்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். உங்கள் கருத்துக்களை ***ctstamilthinnai@gmail.com*** என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.

சோகம் –

அழகாய் பறந்து செல்லும்

வண்ணத்துப்பூச்சிக்கும்

சோகம் உண்டு

தன்னால்

நடக்கமுடியவில்லையே

என்று!!

**-----மிருணாளினி**



## தண்ணீர்..தண்ணீர்



**நடராசன்**

*Future is not what happens*
*But what we create..*
ஏதோ நடப்பதன்று எதிர்காலம்
இன்று படைப்பதொன்றே எதிர்காலம்
............................................................

மாணாவரி மழையும் கண்டோம்
மாறாவளி பருவம் கண்டோம்
வறலாத அருவியே கண்டோம்
வற்றாதோடும் ஆறும் கண்டோம்

என்றும்நின்றிடும் இமயம் கண்டோம்
இன்றும்வற்றா கங்கையும் கண்டோம்
ஊர்ஊராய்ப் பாயக் கண்டோம்
உயிரினங்கள் உதிக்கக் கண்டோம்

கரைபுரண்ட காவிரி கண்டோம்
களித்தேமகிழ வைகையும் கண்டோம்
இயற்கைவளமே இதுவும் என்றோம்
இறைத்தன்மையை இவற்றில் கண்டோம்

ஆறுகள் நம் உயிரே என்றோம்
ஆயினும் அவற்றின் அழிவே கண்டோம்
மானிடர்தம் மாபெரும் தவறால்
மாசுபட ஓடவும் கண்டோம்

தண்ணீரைத் தடுத்து நின்றோம்
தனதென மாரும் தட்டிக் கொண்டோம்

தொழில்கூடம் தொடங்கி நின்றோம்
துன்கழிவும் கலக்கக் கண்டோம்

வீணாக்கி விரயம் செய்தோம்
இயற்கைசூழல் அழியக் கண்டோம்
நீர்நிலைகள் வீழக் கண்டோம்
நீரின்உரிமையும் மறையக் கண்டோம்

அனைவர்க்கும் பொதுவே என்ற
அந்நிலையும் மாறக் கண்டோம்
அனைவர்க்கும் நீரில்லை எனும்
அவலநிலை வாரக் கண்டோம்

நீரின்றி மக்கள் அலையக் கண்டோம்
பயிரின்றி மாக்களும் மாயக் கண்டோம்
பச்சைச்சூழல் அழியக் கண்டோம்
பசுமை தருவும் மறையக் கண்டோம்

அனைவருக்கும் நீரிலையெனும்
அவலநிலை மாற்றல் வேண்டும்
ஆளுமையில் மாற்றம் வேண்டும்
அதைமறுத்தால் சீற்றம் வேண்டும்
........நீர் ஆளுமையில்.......
நீர் ஆளுமையில் மாற்றம் வேண்டும்
அதைமறுத்தால் சீற்றம் வேண்டும்!!

மனிதனுக்கே மண்நீரென்னும்
மனப்பாங்கை மாற்றல் வேண்டும்
அகிலம்வாழ் அனைத்துயிர்க்கும்
அதுஎன்றும் பொதுமை வேண்டும்

பலகோடி உயிர்களுக்கும்
வாடிநிற்கும் பயிர்களுக்கும்
பொதுமையே நீர் என்போம்
பொத்தியே காத்து நிற்போம்!!

நன்றி

## மாலதி என்றொரு தாய்

'எப்ப ஆச்சாம்?"

"இரவு, 12:00 மணி இருக்கும்... எனக்கு போன் வந்தது. உடனே, உன்னைக் கூப்பிட்டேன்," என, மாமாவும், கடைக்குட்டி சித்தப்பாவும் பேசுவதை கேட்டு, மாலதி பரிதவித்தாள்.

பக்கத்தில், கண்களிலிருந்த அதிர்ச்சி விலகாமல் வாயில் துண்டை பொத்தியபடி குலுங்கிக் கொண்டிருந்தான், மாலதியின் கணவனான, 'மாஜி' எம்.எல்.ஏ., சிவராமன்.

உயிர் நண்பரான, சேகர், சிவராமனின் முதுகை ஆறுதலாக அணைத்து ஆசுவாசப்படுத்தினார்.

மாலதிக்கும் கண்களில் நீர் வந்தது.

'நான் காண்பது உண்மைதானா... என் மீதான நேசம் இன்னும் மிச்சமிருக்கிறதா சிவராமனிடம்?' மனசுக்குள் ஜில்லிட்டது.

திடீரென்று கூவியபடி, 'நகருங்க... நகருங்க...' என, நான்கு பேர், கண்ணாடி பேழையை துாக்கி வந்தனர். 'கரென்ட் கனெக்ஷன்' தரப்பட்டு, மாலதியின் உடல் அதற்குள், 'ஜில்'லென்று அடைக்கலமானது.

இன்னும் நம்பவே முடியவில்லை, மாலதியால்.

'என்ன ஆயிற்று எனக்கு... இரவு, சிவராமனுக்கும், மகன் தனுஷுக்கும், சப்பாத்தியை சுட்டுப் போட்டேன். செல்ல மகள், காவ்யாவுக்கும் சப்பாத்தியை ஊட்டி விட்டு, கையோடு நானும் ரெண்டை சாப்பிட்டேன். காவ்யாவோட கைகள் எப்பவும் போல கழுத்தை இறுக்க கட்டிக்கொண்ட பின்... ம்ம்... லேசா நெஞ்ச வலிச்சு, மூச்சு முட்டுற மாதிரி இருந்தது...

'அதுக்கப்புறம் கண்ணை இருட்டிக்கிட்டு வந்தது தான் தெரியும்... அப்ப தான், மகன் தனுஷ், 'குட் நைட்' சொல்ல வந்தான்... அதுக்கப்புறம் என்ன ஆயிற்று... ஓ... நான் இறந்துட்டேனா?'

நண்பர்கள் சூழ, அம்மாவின் உடலைப் பார்த்து அவ்வப்போது கேவிக்கேவி அழுதவாறு, வந்திருந்தவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தான், தனுஷ்.

'ப்ச்... என்ன சோதனை இது... கடவுளுக்கு கண்ணே இல்லையா... எத்தனையோ வயசானவங்க, 'என் உயிரை எடுத்துக்கோ'ன்னு, படுக்கையோட கிடக்கறப்ப, இப்படி இள வயசுக்காரங்களை எடுத்துக்கணுமா... பாவம், இவளையே நம்பியிருக்கும், குழந்தை காவ்யாவுக்கு இனி யார் ஆதரவு...' என, வந்தவர்களின், 'உச்' கொட்டல்களை கேட்க முடிந்தது, மாலதியால்.

வயது, 40 இருக்கும். இதுவரை யார் மனசையும் நோகடித்ததில்லை... உதவி என கேட்டவருக்கு, தன்னால் முடிந்த உதவிகளை ஓடிப்போய் செய்வாள்... அதற்காக, எந்த எதிர் பலனையும் விரும்ப மாட்டாள். அதனால் தான் இத்தனை உண்மையான அனுதாபங்கள்...



"ஐயோ... அக்கா," என, அலறி அடித்தவாறு வீட்டுக்குள் நுழைந்து, மாலதியின் உடல் இருந்த பெட்டியின் மீது விழுந்து கதறிய தங்கை ரேவதியை பார்த்தவுடன், மாலதிக்குள் மகிழ்ச்சி பரவியது.

'வா ரேவா... உன்கிட்ட ஒண்ணு சொல்லணும்... மேல் அறைக்கு போய், காவ்யா என்ன பண்றான்னு பாரேன்...' மாலதி பேசியதை, ரேவதி கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. அழுது புரண்டு அரற்றிக் கொண்டிருந்தாள்.

"ரேவா ரேவான்னு எத்தனை பாசமா இருந்தா... இனி, நான் யார்கிட்ட போய் புலம்புவேன்... பொறந்ததுல இருந்து கூடவே இருந்துட்டு, இப்படி பொசுக்குன்னு சொல்லாம போயிட்டியே அக்கா..."

'ரேவா... என்னைப் பற்றி புலம்பியது போதும்... பெரிய இடத்துல என்னைக் கட்டித் தந்து, உன்னை, வசதி குறைஞ்ச மாப்பிள்ளைக்கு கட்டி வெச்சுட்டாங்கன்னு, எத்தனையோ முறை என்கிட்டே நீ பாராமுகமா நடந்துகிட்டது, என் மனச எவ்வளவு வேதனைப்படுத்தி இருக்கு...

'இப்ப, நானே இல்லாம போயிட்டேண்டி... இனி, நீ யார்கிட்ட உன் வெறுப்பை காட்டுவே... இப்ப உனக்கு சந்தோஷமா?'

இறந்த நிலையிலும், மாலதியின் உயிர், தன் மறு பக்கத்தை காட்டியது.

'என்ன இது, நானும் இப்படி... ஆனா ஒண்ணு, காவ்யா பொறந்து வளர ஆரம்பிச்சதுமே, ரேவதி கூட வெறுப்பை விட்டுட்டு, பாசமா நடந்துகிட்டாளே... அது சரி, இந்த காவ்யா என்ன பண்றாளோ... இன்னுமா யாரும் போய் பார்க்கல...

'ஐயோ பாவம் குழந்தை... பசியாயிருக்குமே... நேரம், 8:00 மணி ஆச்சு போலிருக்கே... ச்சே, கடிகார முள் இரவு, 12:00 மணியிலேயே நிக்குதே... ஓ, அதுதான் நான் உயிர் விட்ட நேரமோ?'

சிவராமனின் உற்றார், உறவினர், நண்பர்கள்; மாலதியின் உறவினர், தோழிகள் என, அவளது மறைவையொட்டி துக்கம் விசாரிக்க வந்த பெருங்கூட்டத்தால், பங்களா நிரம்பி வழிந்தது. 'மடமட'வென்று காரியங்கள் நடந்தன.

'ஷாமினா பந்தல் போட ஆட்கள் வந்தாச்சு... சங்கு ஊத ஆள் தயார்... இப்படி இன்னும் இத்யாதிகள்... பரவாயில்லை, நான் நன்றாகத்தான் வாழ்ந்து இருக்கேன்...' மாலதியின் மனசுக்குள் சிறு திருப்தி. 'ஆனால், காவ்யா...' என அரற்றியது.

பெரிய, 'பார்டர்' வைத்த பட்டுப் புடவையில், கழுத்து நிறைய நகைகள் போட்டு, முகத்தில் மஞ்சள் ஒளிர குங்குமப் பொட்டுடன் கண்ணாடிப் பேழைக்குள் வைக்கப்பட்டிருந்த மாலதியின் முகத்தில் எப்போதும் இருக்கும் புன்னகை, இப்போதும், அவளை மேலும் அழகாகக் காட்டியது.

'இறந்து போனாலும் என் அழகு அப்படியே இருக்கிறதே... ஆமாமாம், இந்த அழகையும், சிரிப்பையும் பார்த்துத்தானே பெரிய இடத்துப் பிள்ளையான, சிவராமன், மயங்கி, என்னையே கல்யாணம் பண்ணிகிட்டான்...' என, எப்போதும் போல பெருமிதத்தில் ஒருகணம் மிதந்தது.

அடுத்த கணமே, 'சீ... என்ன இது, நானா இப்படி... ஒன்றும் அறியாத என் காவ்யா குட்டியைத் தவிக்க விட்டு நிர்கதியாய் நிக்கிறேன்... ஐயோ... நான் என்ன செய்வேன்... திடீரென்று என் உயிரை ஏன் பறித்தாய் கடவுளே... முன்னமே தெரிந்திருந்தால், காவ்யாவிற்கு ஏதேனும் வழி செய்திருப்பேனே...

'நான் சொகுசா வாழவா நினைத்தேன். என் உயிர் மொத்தமும், காவ்யாவுக்கு மட்டும் தானே... இனி, அவளுக்கு யார் இருக்கா...' மாலதி அரற்றியதை, அங்கு யாரும்

கவனிக்கவில்லை அல்லது யாருக்கும் தெரியவில்லை.
துக்க வீட்டில் திடீரென்று ஒருவித அமைதி தோன்றுவது சகஜம். அப்படி சில நிமிடங்கள் தோன்றிய அமானுஷ்ய அமைதியை குலைத்து, பெருங்குரலெடுத்து அழுதபடி, தலைவிரி கோலமாக வந்த, வீட்டுப் பணிப்பெண் சுசீலா, அனைவரின் கவனத்தையும் ஈர்த்தாள். மாலதிக்கு, வலது, இடது கை அனைத்தும், இந்த சுசீலா தான்.
"அம்மா, மவராசி... இப்படி போயிடீங்களே... அதுக்குள்ள என்ன அவசரம் உங்களுக்கு... நேற்று கூட நல்லாத்தானே பேசிகிட்டு இருந்தீங்க... என் குடும்பத்தை வாழவெச்ச தெய்வமே... குடிகார புருஷன பத்தி நான் புலம்பறப்பல்லாம், 'வாழ்க்கைன்னா அப்படித்தான் இருக்கும்... உன் புருஷனோட பாசத்தைப் பார்... நீ கொடுத்து வெச்சுருக்கே'ன்னு ஆறுதல் சொல்லி சிரிப்பீங்களே...
"எனக்கு, 'குழந்தை இல்லை'ன்னு அழுதப்ப, 'நாங்க இருக்கோம்'ன்னு தைரியம் தந்துட்டு, இப்ப நீங்க போயிடீங்களே... ஐயோ..."
கொஞ்ச நேரம், உண்மையான பாசத்துடனும், நேசத்துடனும் அழுது புரண்டாள். திடீரென, நினைவு வந்தவளாக எழுந்து, மாடிக்கு ஓடினாள். கூட்டம் மொத்தமும் அவளையே பார்த்தது.
உள்ளே சென்றவள், தாய் இறந்தது அறியாமல் வாயில் கை வைத்து, மலங்க மலங்க விழித்தபடி இருந்த, 10 வயது காவ்யாவை பார்த்தாள். படுக்கையிலேயே சிறுநீர் கழித்து, ஈரமான நிலையில், பரிதாபமாக கடைவாயில் எச்சில் ஒழுக இருந்தவளை, அள்ளி அணைத்துக் கொண்டாள், சுசீலா.

"அடிப் பொண்ணே, மாலதிம்மா எங்கேயும் போகல... உன் கூடத்தான் இருக்காங்க... இதோ இனிமே, நானும் உனக்காகத்தான் வாழப் போறேன்... கடவுள், என் வயத்துல ஏன் குழந்தையை தரலைன்னு இப்பத்தான் புரியுது... இனி, நீதான் என் குழந்தை...
"அம்மா இருந்தப்ப எப்படி உன்னை கண்ணும், கருத்துமா பார்த்துக்கிட்டாளோ... அப்படியே நானும் உன்னை பார்த்துப்பேன். இதோ இங்க தான் எங்கேயோ மாலதிம்மாவோட ஆத்மா இருக்குது... அம்மா, நீங்க நிம்மதியா போங்க... நான் இருக்கேன் உங்க காவ்யாவுக்கு..."
கண்களில் நீர் வழிய, காவ்யாவை கட்டிக்கொண்ட, சுசீலா, ஆதரவாக எழுப்பி, சிறுநீர் கழித்த ஆடையை மாற்றி, அவளை குளிப்பாட்டினாள்.
இதையெல்லாம் ஓரமாக இருந்து பார்த்த, மாலதிக்கு, கண்களில் நீருடன் மனமும் நிறைந்தது.
'இனி கவலையில்லை... என் விதியை ஏற்றுக்கொள்கிறேன்... குழந்தையான என் செல்ல மகள் காவ்யாவுக்கு, எனக்கு பதிலாக இன்னொரு அம்மா கிடைத்து விட்டாள். இது போதும் எனக்கு...'
மாலதி என்றொரு தாய், நிம்மதியாக தன் இறுதி பயணத்தை துவங்கினாள்.
தாய் தன் குழந்தைகளையே எப்பொழுதும் நினைத்துக் கொண்டு இருப்பாள், அவர்களின் நலம் பற்றி கடைசி மூச்சு வரை சிந்தனையுடன் இருப்பாள் என்பதை கதை ஆசிரியர் சொல்லும் விதம் என் மனதை நெகிழ வைத்தது.

**படித்ததில் பிடித்தது**

## **தமிழ் நயம்**



"கடை மடை
தலை மடை"

ஒரு முறை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மடங்களின் ஒருங்கிணைப்பு மாநாடு ஒன்று மதுரையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. குறிப்பிட்ட நாளன்று எல்லா மடாதிபதிகளும் வந்து சேர்ந்தனர் ஒரு மடாதிபதியைத் தவிர. மாநாடு தொடங்க வேண்டிய நேரம் நெருங்கியதால் மாநாட்டின் தலைவர் தனதுரையைப் பேச வந்தவர்களை வரவேற்கத் தொடங்கினார். அப்போது அவசர அவசரமாக ஒரு மடாதிபதி, தமிழகத்தின் கடைக்கோடி ஊரான குமரியிலிருந்து, கடைசியாக வந்து சேர்ந்தார். அவர் மாநாட்டுக்கு தாமதமாக வந்ததை கிண்டல் செய்யும் வகையில் மாநாட்டுத் தலைவர் " வாருங்கள் ! வாருங்கள் !! கடை மடையரே" என்று கூறி அவரை வரவேற்றார்.
அதைக் கேட்ட குமரி மடாதிபதி அதற்கு தக்க பதிலடி கொடுக்கும் வகையில் "வணக்கம் தலை மடையரே" என்று கூறி அமர்ந்ததும் மாநாட்டுப் பந்தலில் உள்ள மற்ற மடாதிபதிகள் உட்பட அனைவரும் அந்த இரு மடாதிபதிகளின் சிலேடைப் பேச்சை இரசித்துச் சிரித்தனர்.

விளக்கம்:
கடை மடையர் என்பதற்கு இருவகையில் பொருள் கொள்ளலாம்.
கடைசியாக வந்த மடையர் என்றும் கடைக்கோடியில் இருக்கும் மடத்தின் தலைவர் என்றும் பொருள் கொள்ளலாம்.
அது போலவே
தலை மடையரே என்பதற்கும் தலைமை தாங்கும் மடாதிபதி என்றும், மடையர்களின் தலைவர் என்றும் பொருள் கொள்ளலாம்.



" பால் கசக்க வில்லை
துணியும் கசக்க வில்லை "

புலமையும் வறுமையும் சேர்ந்தே இருக்கும் என்ற பழஞ்சொல் இப்போதுள்ள புலவர்களுக்கு பொருந்துமா என்று தெரியவில்லை.

ஆனால் அந்தக் காலத்தில் இருந்த பெரும்பான்மையான புலவர்கள் புரவலர்கள் தரும் பொன்னையும் பொருளையுமே நம்பி வாழ்ந்தனர் என்பதை அவர்கள் பாடிய பாடல்கள் மூலமும் நிகழ்ந்த நிகழ்வுகள் மூலமும் அறிய முடிகிறது.

ஒரு நிகழ்வு :

எட்டையபுரத்தில் வாழ்ந்து வந்தவர் கடிகைமுத்துப் புலவர். அவரின் இறுதிக்காலம் வறுமைக்காலமாய் வருத்தியது.
அந்தக் காலத்தில் படுத்த படுக்கையில் இருப்பவருக்கு பால் கொடுத்து அதைக் குடிக்குமவருக்கு பால் கசந்ததென்றால் அவருக்கு மரணம் நெருங்கிவிட்டது என்றொரு எண்ணம் மக்கள் மத்தியில் நிலவியது.
புலவருக்கும் அவரது உறவினரொருவர் பாலைக் கொடுக்க , புலவர் முகம் சுளித்து பால் வேண்டாமென்று சொல்ல "என்ன பால் கசக்கிறதா " என்று புலவரின் உறவினர் வினவினார்.
அதற்குப் புலவர்
"பாலும் கசக்கவில்லை
பால் வடிகட்டின துணியும் கசக்கவில்லை"
என்று சிலேடையாகப் பதிலளித்து
தனது வாழ்வின் அவல நிலையை நினைத்து வெறுமையாக சிரித்தார்.

விளக்கம்:

பால் கசக்க வில்லை என்பதால் அவரது மரணம் நெருங்கவில்லை என்பதைக் கூறி, பால் வடிகட்டின துணி அழுக்காக இருந்தது என்பதை
துணியும் கசக்கவில்லை
(துவைக்கவில்லை) என்று கூறி அவரது குடும்ப அவல நிலையை சொல்லாமல் சொன்னார்.

கோர்த்தது:
இறையழகு.



ஒரு நடிகர் தன்னோட செயின் அ கடிச்சுக்கிட்டே இருக்காரு ஏன்

ஏன்னா அவரு ''நகை''ச்சுவை நடிகராம்………



இந்தியாவில் ரொம்ப கவலையான மாநிலம் எது?

*Worry sa (ஒரிஸா)*

## கொலம்பஸ் தமிழ்ச் சங்க செய்திகள்



**மதிவதனி சாந்தி-ஈஸ்வரன்**

மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சொல்வார்கள். இன்று கடல் கடந்து வந்து வாழ்ந்தாலும் நம் அனைவரின் தொடக்கமும் நம் பெற்றோர்கள் தான். கடந்த இரு ஆண்டுகளாக கொரோனவால் தாயகம் செல்லமுடியாமல் இங்கிருப்பவர்களும், நம்மை வந்து பார்க்க முடியாமல் பெற்றோர்களும் வீட்டுவாசத்தில் இருந்தனர். இந்த வருடம் மீண்டும் நிலைமை சகஜமானதும் பலரின் பெற்றோர் தங்களின் மகனஅல்லது மகள் குடும்பத்தினரை பார்க்க வந்திருந்தனர். அப்படி நம்ம கொலம்பஸ்க்கு வந்த பெற்றோர்களுக்காக முதல் முறையாக ஒரு பொன்மாலை பொழுதை கொலம்பஸ் தமிழ் சங்கம் தமிழ் திண்ணையுடன் இனைந்து ஏற்பாடு செய்திருந்தது.

பெற்றோர்களுக்கான அறிமுக படலம், விடுகதை போட்டி, பழைய பாடல்கள் கண்டுபிடிக்கும் போட்டி என பல விளையாட்டுகள் நடத்தப்பட்டது. வந்திருந்த பெற்றோர்கள் அனைவரும் நிகழ்ச்சியில் ஆர்வத்தோடு கலந்துகொண்டனர். அவர்களுக்கு மாலை சிற்றுண்டி வழங்கப்பட்டது. இறுதியாக பெற்றோர்களோடு, தமிழ் சங்க நிர்வாக குழு, தன்னார்வலர்களும் இணைந்து புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.



## மவுண்ட் எவரெஸ்ட் பேஸ் கேம்ப் ட்ரெக்கிங் – திருமதி.ராஜேஸ்வரியுடன் ஒரு நேர்காணல்



**-ஜானு இசக்கிராஜ்மோகன்**

திருமதி. ராஜேஸ்வரி குழந்தைகளுடன் கொலம்பஸ்சில் வசிக்கிறார். அவர் ஒரு சிறந்த விளையாட்டு வீரர், *trekker* மற்றும் சிறந்த பாடகி. அவர் கைப்பந்து *(volley ball)*, பூப்பந்து *(badminton)* மற்றும் எறி பந்து *(Throw ball)* விளையாட்டுகளில் மிகுந்த ஈடுபாடு உடையவர். சமீபத்தில் இமயமலையில் எவரெஸ்ட் பேஸ் கேம்ப்பிற்கு ட்ரெக்கிங் சென்று வந்துள்ளார். குறிப்பாக பெண்கள் எவரெஸ்ட் பேஸ் கேம்ப்பிற்கு செல்வது எளிதான காரியம் அல்ல. உயரம், வானிலை மற்றும் ஆபத்துகள் மிகுந்த பயணமாகத் தான் பொதுவாக கருதப்படுகிறது. சவால்கள் நிறைந்த இப்பயணத்தை மேற்கொண்ட நமது தோழி ராஜேஸ்வரி தனது பயண அனுபவங்களை உரையாடலாகப் பகிர்கிறார். நாம் அவரிடம் கேட்ட சில கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதில்களின் தொகுப்பும்....

எவெரெஸ்ட் பேஸ் கேம்ப் ட்ரெக்கிங் பயணத்திற்கு உங்களைத் தூண்டியது எது ?என்னுடைய உத்வேகம் நானே தான் என்று சொல்வேன். எனக்கு புதுப்புது அனுபவங்கள் மீது மிகவும் ஆர்வம் உண்டு. அந்த வகையில் என்னுடைய கணவரின் சகோதரர் இந்தியாவில் இப்படி ஒரு ட்ரெக்கிங் அனுபவம் இருப்பதாக என்னிடம் பகிர்ந்துகொள்ள, எனக்கு அதில் ஆர்வம் வந்து அதைப் பற்றிய விவரங்களைக் கேட்டு அறிந்தேன். இப்படித்தான் என்னுடைய ட்ரெக்கிங் பயணத்தின் ஆர்வம் சென்ற ஆண்டு *(2021)* டிசம்பர் மாதம் துவங்கியது.

**இதற்கு முன்பு ட்ரெக்கிங் (நீண்ட நடைபயணம்) சென்ற அனுபவம் இருக்கிறதா?**

ஆமாம். இதற்கு முன்பு *Hawaai* இல் இருக்கும் மிக பிரபலமான *Haleakala National Park* இல் *11* மைல் ஹயிக் தான் என்னுடைய நீண்ட பயணமாக இருந்தது.



**பயணத்திட்டம் (Itinerary) எப்படி இருந்தது? மற்றும் முழு பயணத்திற்கும் எத்தனை நாட்கள் ஆகும் என்பதைப் பற்றிய விவரங்களை எங்களுடன் பகிருங்கள்:**

எவெரெஸ்ட் பேஸ் கேம்ப் *(Everest Base Camp - EBC)* என்பது நேபால் நாட்டில் உள்ள இமாலய மலைத்தொடரின் மிக உயர்ந்த

சிகரம் *(Summit)* கொண்ட எவெரெஸ்ட் மலையின் அடிவாரம். *Base Camp* என்று அழைக்கப்படுவதின் காரணமாவது எவெரெஸ்டின் சிகரத்தை அடைய முயற்சி மேற்கொள்பவர்கள் அங்கு வந்து கூடாரங்களில் தங்கி இருந்து தங்களைத் தயார் படுத்திக்கொள்ளும் இடம்.

*EBC* அடைவதற்கு பல வழிகள் உள்ளன. அதில் நான் மேற்கொண்டது 12 நாட்கள் இருவழிப் பயணமாகும் *(round trip)*. லுக்லா *(Lukla)* என்ற இடத்திலிருந்து ட்ரெக்கிங் தொடங்கி, நாம்சே பஜார் *(Naamche Bazaar)*, தேங்போச்சே *(Tengboche)*, டிங்போச்சே*(Dingboche)*, லோப்புச்சே *(Lobuche)*, கோரக்செப் *(Gorakshep)* என்ற இடங்களின் வழியாக *EBC* சென்றடைந்தேன். இந்தப் பாதையைக் கடக்க 9 நாட்கள் ஆனது. பிறகு அங்கு இருந்து வேறு வழியாக ( *EBC* > கோரக்செப் > பெரிச்சே > நாம்சே பஜார் > பக்டிங் > லுக்லா) 3 நாட்களுக்குப் பிறகு தொடக்க இடத்திற்கு வந்தடைந்தேன்.

ட்ரெக்கிங் நாட்கள் மொத்தம் 12 என்றாலும், காத்மாண்டுவில் இருந்து லுக்லாவிற்கு சிறு விமானம் வாயிலாக வந்து அடைவதற்கு ஒரு நாளும் மற்றும் லுக்லாவில் இருந்து காத்மாண்டு சென்று அடைய ஒரு நாளும் தேவைப்படுகிறது. இதை தவிர மற்ற நாடுகளில் இருந்து நேபால் வந்தடைவதற்கான நாட்களும் கணக்கில் கொள்ள வேண்டும்.

***நீங்கள் உடல்ரீதியாக அல்லது மனரீதியாக என்ன சவால்களை எதிர்கொண்டீர்கள்?***

சவால்கள் என்பது அவரவர் பலத்தை பொறுத்தது. சிலருக்கு சவாலாக இருக்கும் ஒன்று வேறு சிலருக்குச் சாதாரணமாக இருக்கலாம். ஆனால் சரியான பயிற்சி மேற்கொண்டால் யார் வேண்டுமானாலும் எதையும் சாதிக்கலாம் என்பது இந்த ட்ரெக்கிங்கில் நான் அறிந்து கொண்ட உண்மை.

என்னைப் பொறுத்த வரையில், இது ஒரு புது அனுபவம் என்பதால் என்ன எதிர்பார்ப்பது என்று கூட எனக்குத் தெரியவில்லை. இந்த ட்ரெக்கிங்கை பற்றித் தெரிந்து கொள்ள இணையதளத்தில் நிறைய வலைப்பதிவுகள் *(blogs)* படித்தேன் மற்றும் *EBC* பற்றிய நிறைய யுடியூப் விடியோக்கள் பார்த்தேன். இப்படித்தான் என்னை மனரீதியாக தயார் படுத்திக் கொண்டேன்.

உடல் ரீதியாக நான் ஒரு உடற்ப்பயிற்சி செயல் முறையை பின் பற்றினேன். அதை தவறாமல் 4 மாதங்கள் கடை பிடித்தேன் . அதில் சூர்ய நமஸ்காரம் , ஓடுதல் *(Running)*, மிதிவண்டி ஓட்டுதல் *(cycling)*, படிக்கட்டு ஏறுதல் *(stair climbing)* மற்றும் உயர் தீவிர பயிற்சி என்று அழைக்கப்படும் *(High Intensity Training)* என பல பயிற்சிகள் அடங்கும். தினமும் 1.5 மணி நேரம் பயிற்சி மேற்கொண்டேன். இது எனக்கு மிகவும் உதவியாக இருந்தது. ஏன்னெனில் *EBC* அளவு உயரத்தில் ட்ரெக்கிங் செய்வதற்கு நல்ல நுரையீரல் சக்தியும் வெகு தூரம் நடக்கும் கால்களின் சக்தியும் மிகவும் அவசியம்.

*நாம் தனியாக செல்லலாமா அல்லது வழிகாட்டிகள் அல்லது போர்ட்டர்களுடன் செல்ல வேண்டுமா?*

*EBC* ட்ரெக் என்பது தனியாக மட்டும் அல்லாமல் வழிகாட்டிகள் (*Guides*) மற்றும் போர்ட்டர்கள் உதவியுடனும் செல்லலாம். அவர்களை ஷெர்பாஸ் (*Sherpas*) என்று அழைப்பார்கள். ஷெர்பாக்களின் முக்கிய வேலையாவது நமக்கு *12* நாட்களுக்கு தேவையான பயண மூட்டையை நம்முடன் அவர்கள் சுமந்து கொண்டு வருவது மற்றும் பயணத்தின் போது நம்முடைய தண்ணீர் மற்றும் உணவுத் தேவைகளை சரி பார்த்துக் கொள்வது எனவாகும். என்னுடைய *EBC* பயணத்தில் என்னுடன் இணைந்து *10* இந்தியர்களும் பயணித்தனர். அவர்கள் அனைவரின் பயண மூட்டைகளை *5* ஷெர்பாக்கள் சுமந்து வந்தனர். தனியாகச் செல்பவர்கள் அவர்கள் பயண மூட்டையை அவர்களே சுமப்பதோடு மட்டும் அல்லாமல் *12* நாட்கள் தங்கும் விடுதி மற்றும் தினசரி உணவுத்தேவைகள் அவர்களே திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.

***மலையேற்ற பாதையில் wifi வசதிகள் உள்ளதா, ஏதேனும் தகவல் தொடர்பு சாதனங்களை எடுத்துச் சென்றீர்களா?***

ஆமாம். நாங்கள் தங்கிய விடுதிகளில் சில இடங்களில் *wifi* வசதி இருந்தது. சில விடுதிகளில் அதற்குக் கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. இதைத் தவிர என்னுடன் பயணம் செய்த சில சகபயணிகள், இன்டர்நேஷனல் ரோமிங் வைத்து இருந்தனர்.

டவர் இருக்கும் இடங்களில் (விடுதிகள் உள்ள இடங்களில்) எல்லாம் ரோமிங் வசதி என்பது அவர் அவர் குடும்பத்தினருடன் தொடர்பு கொள்ள மிக மிக உதவியாக இருந்தது.

***EBC மலையேற்றத்திற்கான தோராயமான பட்ஜெட் என்ன? அவர்கள் மலைகளில் கடன் அட்டையை(credit card) ஏற்றுக் கொள்கிறார்களா? இந்த பயணத்திற்கு எவ்வளவு பணம் தேவைப்படும்?***

நான் டிரெக்னோமாட்ஸ் (*Treknomads*) எனும் ட்ரெக்கிங் நிறுவனம் வாயிலாக இந்த *EBC* ட்ரெக்கிங்கை மேற்கொண்டேன். இதற்கான கட்டணம் அந்த நிறுவனத்தின் இணையதளமான *treknomads.com* இற்கு சென்று அறிந்து கொள்ளலாம். இதைத் தவிர, பயணத்தின் போது வழிச்செலவிற்கு சிறிது பணம் எடுத்துச் செல்லலாம். நாம் ட்ரெக்கிங் நிறுவனத்திற்கு செலுத்தும் கட்டணமானது தங்கும் விடுதி, மூன்று வேலை உணவு மற்றும் இரு முறை தேநீர் (*Ginger Lemon Tea*) ஆகியவை மட்டுமே உள்ளடங்கும். இதை தவிர ஏதேனும் தின்பண்டமோ அல்லது தேனீரோ அருந்த விரும்புவார்கள் தங்கள் சொந்த செலவில் பெற்றுக் கொள்ளலாம். எனவே கூடுதலாக சுமார் *5* முதல் *10* ஆயிரம் இந்தியன் ரூபாய் வைத்திருப்பது பரிந்துரைக்க படுகிறது. பயணத்தின் முடிவில் ஷெர்பாக்களுக்கு சிறிது பணம் கொடுப்பது அவர்களை கௌரவிப்பதாக கருதப்படுகிறது. இது அவர்களை உற்சாகப் படுத்தும் வகையிலும் அமைகிறது. கிரெடிட் கார்டுகள் நாம்சே பஜார் என்ற இடத்தில் மட்டும் தான் ஏற்றுக்கொள்ளப் படுகிறது. அதுவும் பெரிய கடைகளில் மட்டும் தான். சிறிய கடைகள் நேபால் நாணயம் மட்டுமே ஏற்றுக்கொள்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**நீங்கள் எவ்வளவு உடற்பயிற்சி செய்தீர்கள்? உள்ளூரில் நடைபயணம் மேற்கொண்டீர்களா? எத்தனை மாதங்கள் செய்தீர்கள்?**

நான் ட்ரெக்கிங் செல்வதற்கு முன்பு சுமார் நான்கு மாதங்கள் தொடர்ந்து உடற்பயிற்சி மேற்கொண்டேன். இதை தவிர *Ohio* வில் உள்ள சில இடங்களில் ட்ரெக்கிங் செய்தேன். மிக முக்கியமாக *EBC* ட்ரெக்கிங் பாதையானது மிகவும் கரடு முரடாக இருக்கும் என்றும் அபார குளிர் பகுதி என்பதாலும் *Ohio* குளிரில் ட்ரெக்கிங் செய்து இவை இரண்டிற்கும் என்னை தயார் படுத்திக்கொண்டேன். அது மட்டும் அல்லாமல் *Ohio* வில் செய்த ட்ரெக்கிங் இங்கு உள்ள மிக அழகான இடங்களை கண்டுபிடிக்க ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது. உதாரணத்திற்கு ராக்பிரிட்ஜ் *(Rockbridge State Park)* என் மனதை கவர்ந்த இடங்களில் ஒன்று. *Hike Ohio* என்ற ஒரு இணையதளத்தின் மூலம் *Ohio* வில் இருக்கும் இந்த ட்ரெக்கிங் இடங்களை அறிந்து கொண்டேன்.

**அங்கு வானிலை எப்படி இருந்தது மற்றும் மலையேற்றத்திற்கான சிறந்த பருவம் எப்போது?**

நான் முன்பே கூறியது போன்று *EBC* செல்லும் நடை பாதை முழுவதும் அபார குளிர் எதிர் கொள்ள வேண்டும். ஆனால் நாம் எப்பொழுதும் நடந்து கொண்டு இருப்பதால் அவ்வளவாக குளிர் நம்மை வதைக்காது. என்றாலும் விடுதிகளில் உறங்கும் நேரத்திலோ அல்லது ஒரு இடத்தில் உட்கார்ந்து உண்ணும் நேரத்திலோ மிகுந்த குளிர் எதிர் கொள்ள வேண்டியிருக்கும்.



*EBC* செல்வதற்கு இரண்டு பருவங்கள் உகந்தது. ஒன்று பருவ மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பு *(*மார்ச் *-* மே*)* மற்றொன்று பருவ மழைக்காலம் முடிந்த பின்பு *(*செப்டம்பர் *-* நவம்பர்*)*. இதற்கு இடைப்பட்ட காலம் *EBC* செல்வதற்கு உகந்தது அல்ல. எனினும் சில சுற்றுலா பயணிகள் மற்ற பலன்களை (அறிய விலங்கினங்கள், பறவைகள் எதிர்ப்பாடு) கருதி இக்காலத்திலும் செல்வதுண்டு. நான் *EBC* பயணம் மேற்கொண்டது *2022* ஆம்

ஆண்டு *April* மாதம். எனவே அந்த காலகட்டத்தில் வெப்ப நிலை குறைந்த பட்சம் *-5* டிகிரி செல்சியஸாகவும் அதிக பட்சம் *22* டிகிரி செல்சியஸாகவும் ஏற்ற இறக்கத்துடன் காணப்படும். அவ்வப்போது காலை மற்றும் மாலைப் பொழுதுகளில் மிதமானது முதல் கனமான மழையும் எதிர்கொள்ளப்பட்டது. ஏப்ரல் மாதம் வசந்த காலம் என்பதால், அந்நாட்டின்

தேசிய மலரான ரோடெண்டென்றோன் (Rhodendendron ) எனும் அழகிய இளஞ்சிவப்பு நிறப்பூக்கள் சில பகுதிகளில் பூத்துக்குலுங்குவதைப் பார்க்கலாம்.

**தங்குமிடம் மற்றும் உணவு அனுபவம் பற்றி என்ன ஆலோசனைகள் அல்லது பரிந்துரைகள் வழங்க விரும்புகிறீர்கள்?**

சுற்றுலா பயணிகள் தங்குவதற்கு என்று பாதையின் சில இடங்களில் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் தனியார் நிர்வாகத்தால் இயக்கப்படுபவை ஆகும். இவ்விடுதிகளில் பயணிகளுக்கான



உணவு பரிமாறும் வசதியும் கழிப்பறை வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. விடுதிகள் அனைத்தும் மரத்தாலான மூலப் பொருட்களால் கட்டப்பட்டு உள்ளதாலும் நவீன வெப்பம் தரக்கூடிய கருவிகள் ஏதும் பொறுத்தப்படாததாலும், பொதுவாக இவ்விடுதிகள் குளிர்ச்சியாக இருக்கும். சில விடுதிகளில் உணவு அருந்தும் இடங்களில் (Dining area) மட்டும் நிலக்கரியால் இயங்கும் வெப்பம் தரும் சாதனங்கள் பொருத்தப்பட்டு இருக்கும் (நம் பாட்டி காலத்து பாய்லர்கள் போன்று).

நேபாளியர்களுக்கு நம்மைப் போன்று அரிசி தான் பிரதான உணவாகும். எனவே மதிய உணவு எப்பொழுதும் சாதம் பரிமாறப்பட்டது. இதனுடன் தால் பாத் என அழைக்கப்படும் வேகவைத்த பச்சைப் பயிறு குழம்பு பதத்தில் சாதத்தில் பிசைந்து சாப்பிடுவதற்கு கொடுக்கப்பட்டது. உருளைக்கிழங்கு அல்லது கேரட் பதார்தமாக வழங்கப்பட்டது. சில நேரங்களில் அங்கு உள்ள கீரை வகைகளும் கிடைக்கும். இதை தவிர காலை உணவிற்கு பிரட் ஜாம். ஓட்ஸ், ஆம்லெட், ஆப்பிள் மற்றும் இரவு உணவிற்கு பாஸ்தா, பீசா, நூடுல்ஸ், பிரைட் ரைஸ், சப்பாத்தி என பல வகைகள் அவர் அவர் விருப்பத்திரு ஏற்ப வழங்கப் பட்டது. ஒவ்வொரு நாளும் மூன்று வேளை உணவை தவிர இரண்டு வேளை இஞ்சி எலுமிச்சை டீ (Ginger Lemon Tea) கொடுக்கப் பட்டது. இது எங்கள் நடை பாதையின் போது எங்களை உற்சாகமாக வைத்துக் கொள்ள மிகவும் ஏதுவாக இருந்தது.

ஒரு சில நாட்களில் மாலைச் சிற்றுண்டியாக ஆனியன் பக்கோடாவும் பிரெஞ்சு பிரைஸ் உம் கூட கிடைக்கும். நம் வீட்டை விட்டு அவ்வளவு தூரத்தில் இருக்கும் போது இவை எல்லாம் சாப்பிடக் கிடைத்தால் எப்படி இருக்கும் - அடடா சொர்க்கம் தான்.

**முன்பதிவுகளை (Prebooking) எவ்வாறு நிர்வகித்தீர்கள்? முன்கூட்டியே பதிவு செய்தீர்களா அல்லது நீங்கள் அங்கு சென்று பதிவு செய்தீர்களா?**

நான் இந்த ட்ரெக்கிங்கை ஒரு ட்ரெக்கிங் நிறுவனத்தின் வாயிலாக மேற்கொண்டதால், தங்குவதற்கு இடம், சாப்பிட உணவு ஆகிய அணைத்து முன்பதிவுகளையும் அந்நிறுவனமே முன்னேற்பாடு செய்து கொடுத்து விட்டது. காத்மாண்டுவில் தொடங்கி திரும்பவும் காத்மாண்டு வந்து சேரும் வரை அனைத்து ஏற்பாடுகளும் முன்கூட்டியே செய்யப் பட்டு இருந்தது. இந்தியாவில் இருந்தோ அல்லது வேறு நாடுகளில் இருந்தோ காத்மாண்டு செல்வதற்கான ஏற்பாட்டை மட்டும் அவரவர் செய்து கொள்ள வேண்டியிருந்தது. எங்கள் ட்ரெக்கிங் ஏப்ரல் மாதம் தொடங்க இருந்ததால் அனைத்து ஏற்பாடுகளும் மார்ச் மாதமே நிறைவு செய்யப் பட்டன.

**பயணத்திற்குத் தேவையான ஆடைகள் மற்றும் பிற தேவையான பொருட்களை எவ்வாறு தேர்வு செய்வது?**

EBC ட்ரெக்கிங்கிற்கானஆடை தேர்வு மிகவும் முக்கியம். ஏனென்றால் நாம் அணிந்துள்ள

நமக்கு வசதியாக இருந்தால் தான் நம்மால் இடையூறுகளின்றி நடை பயணம் மேற்கொள்ள முடியும். அவ்வகையில் நாம் எப்பொழுதும் பல அடுக்குகளில் (layering) உடை அணிவது மிகவும் ஏற்றது. காலை நாம் நடை பயணம் தொடங்கும் பொழுது வெப்ப நிலை மிகவும் குறைவாக இருக்கும். ஏனெனில் இரண்டு மூன்று லேயர்கள்அணிந்து தொடங்கினால் நேரம் போகப் போக வெப்ப நிலை உயர உயர நம் லேயர்களை நீக்கி விடலாம். இரவு நேரங்களில் வெப்ப நிலை மிகவும் குறைவாக இருக்கும். ஏனெனில் தூங்கும் பொழுது உடம்பின் வெப்பத்தை உள்வைத்துக்கொள்ளும் ஆடைகளை (தேர்மல்ஸ், கையுறைகள், காலுறைகள்) அணிந்து உறங்குவது நல்ல தூக்கத்தை கொடுக்கும். நீங்கள் இயல்பாக குளிரில் தூங்குபவர் என்றால் இவை எதுவும் தேவைப்படாது. அனைத்து விடுதிகளிலும் கொடுக்கப்படும் குவில்ட் என்று அழைக்கப் படும் போர்வையே போதுமானது.



ஆடைகளைப் பொறுத்த வரை நாம் ஒரு நாளைக்கு என்ன அணியப்போகிறோம் என்று முன் கூட்டியே வகைப் படுதிக் கொள்ள வேண்டும். நான் முன்பே கூறியது போன்று 3 அல்லது 4 லேயர்கள் எவை என்று கூறுகிறேன் – 1. தேர்மல்ஸ் 2. ரெகுலர் டீ ஷர்ட் மற்றும்

பேண்ட் 3. பிளீஸ் ஜாக்கெட் *(Fleece Jacket)* 4. விண்ட் பிரேக்கர் ஜாக்கெட் *(Wind Breaker).* நீங்கள் நன்கு குளிர் தாங்குபவராக இருந்தால் இதில் இரண்டு அல்லது மூன்று லேயேர்களே போதுமானது.

இரவுகளில் தூங்குவதாற்கான படுக்கை சம்மந்தப்பட்ட எந்த பொருட்களும் நாம் எடுத்து கொண்டு செல்ல அவசியம் இல்லை. இவை அனைத்தும் விடுதிகளில் கொடுக்கப்படும். பொதுவாக நாம் சுற்றுலா செல்ல என்ன பொருட்கள் எடுத்துச் செல்வோமோ (சோப்பு, ஷாம்பு என இதர சுகாதார தேவைகள்) அவை போதுமானது. நான் ட்ரெக்கிங் நிறுவனம் வாயிலாக சென்றதால் ஒவ்வொரு பயணிக்கும் பை எடை வரம்பு கொடுக்கப் பட்டு இருந்தது. இது 12 கிலோ என்பதாகும். ஆதலால் நாம் என்ன எடுத்துச் செல்கிறோம் என்பது மிக முக்கியம். இந்த எடை அளவிற்கு முக்கிய காரணம் என்னவென்றால் இதை வழி தோரும் சுமக்கப் போகும் ஷெர்பாக்களுக்கு உதவும் வண்ணம் அமைக்கப் பட்டுள்ளது. ஒரு ஷெர்பா என்பவர் இரு பயணிகளின் பையை சுமக்க வேண்டும் என்பதால் ஒவ்வொரு பையின் எடையும் வரம்புக்குள் இருக்க வேண்டும். அவர்களும் மனிதர்கள் தானே. இதைத் தவிர நாம் ஒவ்வொரு தினத்திற்குத் தேவையான பொருட்கள் வைத்துக் கொள்ள ஒரு பேக்பேக் எடுத்துச் செல்லலாம். இதை டே பேக் *(day pack)* என்று அழைப்பார்கள். இதில் நம் நடை பாதைக்குத் தேவையான தண்ணீர், சிற்றுண்டி இவற்றை எடுத்துச் செல்லலாம். டே பேக் ஷெர்பாக்களிடம் கொடுக்காமல் பயணிகள் அவர் அவர் பொறுப்பில் வைத்துக் கொள்ளவேண்டும்.

**நீங்கள் தங்கியிருந்த இடங்களைச் சுற்றியுள்ள தனிப்பட்ட பாதுகாப்பு பற்றி எங்களிடம் கூறுங்கள்?**

பாதுகாப்பிற்கு ஒரு குறையும் கிடையாது. அங்கு உள்ள மக்கள் மிகுந்த விருந்தோம்பலுடன் உபசரித்தனர். மிகவும் மரியாதைக்கு உரியவர்கள். அதுவும் சுற்றுலா பயணிகள் என்றால் இன்னும் கவனிப்பு அதிகம். நம் தமிழ் மக்களுக்கு ப் பிறகு அ னைத்து வயதினருக்கும் மரியாதை அளிப்பதை அவ்ரகளிடம் தான் கண்டேன். நான் வியந்த ஒரு பழக்கம் என்னவென்றால் அவர்கள் எந்த பொருளை கொடுத்தாலும் இரு கரங்கள் கூப்பி கொடுக்கிறார்கள். மரியாதையின் சின்னம் என்று கூறுகிறார்கள்.

**உங்கள் பயணத்தின் சிறந்த தருணம் எது? EBC அடைந்ததன் உணர்வு எப்படி இருந்தது?**

*EBC* ட்ரெக்கிங் அனுபவத்தில் எனக்கு மிகவும் பிடித்தமான பகுதி என்னவென்றால்,

ஒவ்வொரு நாளும் காலை படுக்கையை விட்டு எழுந்து வெளியில் வந்தால் நம்மை சுற்றி இயற்கை மட்டும் தான் நம்



கண்ணுக்குத் தெரியும் பனி மூடிய மலைகள், மேகங்கள், குளிர் காற்று, “ஓம் மாநி பட்மே ஹம்” எனும் நேபாளியர்களின் மந்திரம் இவை அனைத்தும் மனதிற்கு மிகவும் நிறைவாக இருக்கும்.

EBC சென்றடைந்த அந்த நாள் மற்றும் அந்த உணர்வு இன்றும் எனக்கு சிலிர்ப்பைத் தருகிறது. எத்தனை இன்னல்கள் எதிர் கொள்கிறோம் இந்த மனித வாழ்க்கையில். இயற்கையின் முன் இவை எல்லாம் வெறும் தூசி என்ற வகையில் நினைக்கத் தோன்றியது. அனைவரையும் போல் நானும் மகிழிச்சி பொங்க கண்ணீர் விட்டு என் சாதனையைக் கொண்டாடினேன். என்னுடன் பயணம் செய்த கொலம்பஸ் குடியிருப்பாளரும் மற்றும் எனது தோழியுமான நிம்மி கட்டாவும் நானும், 5364m என்று எழுதி இருந்த அந்த பெரிய பாறை மீது ஏறி நின்று இந்தியக் கொடியைப் பிடித்தவாறு புகைப்படங்கள் எடுத்துக்கொண்டோம்.

**பயணத்தின் கடினமான பகுதி எது? கற்றுக்கொண்ட மிகப்பெரிய பாடம் என்று ஏதாவது எங்களுடன் பகிர விரும்புகிறீரகளா?**

EBC ட்ரெக்கிங்கில் எனக்கு மிகவும் இடையூறாக அமைந்த பகுதி என்றால் அது ட்ரெக்கிங்கின்போது எனது கால் சுளுக்கு பிடுத்துக் கொண்டது. மொத்தம் 20km ட்ரெக்கிங் செய்வது தான் அன்றைய திட்டம். ஆனால் பத்தாவது கிலோமீட்டரிலேயே என் கால் சுளுக்கு பிடித்துக் கொண்டது. அந்த வலியுடன் மீதம் உள்ள 10km நடந்து எனது அந்த நாள் ட்ரெக்கிங்கை முடித்தேன். பிறகு எனது வழிகாட்டியிடம் (guide) ஏன் இப்படி



நடந்தது என்று கேட்டபோது அவர் நான் உயரமான பாறைகளை கடக்கும் போது அகல கால் பதித்திருப்பேன் என்று கூறினார். நான் அன்று கற்ற பாடம் அது. பாறைகளில் நடப்பதற்கு கூட ஒரு முறை உண்டு இல்லையென்றால் இப்படித்தான் அவஸ்தை பட வேண்டியிருக்கும்.

இதைத் தவிர ஒரு வாழ்க்கை பாடமாக நான் கற்றுக் கொண்டது என்னவென்றால் நாம் செய்யும் எந்த பணியிலும் அர்ப்பணிப்பும் தகுந்த பயிற்சியும் மேற்கொண்டால் எந்த ஒரு கடினமான பாதையையும் கடந்து வரமுடியும். இது வாழ்க்கையில் எந்த ஒரு லட்சியத்தையும் அடைய வழிவகுக்கும்.

**எவரெஸ்ட் பேஸ் கேம்ப் ட்ரெக்கிங் எவ்வளவு கடினமானது? எதிர்கால ட்ரெக்கிங் செய்பவர்களுக்கு ஏதேனும் குறிப்புகள், ஆலோசனைகள் கூற விரும்புகிறீரகளா?**

EBC ட்ரெக்கிங் உண்மையாக மிகக் கடினமான ஒன்று என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் கிடையாது. ஆனால் அதற்கு த்தகுந்த பயிற்சியை மேற்கொண்டால் மிக அழாகான இயற்கையை பாதை முழுவதும் நம்மால் ரசிக்க இயலும். நம் உடலுக்கு எந்த அளவுக்கு இயற்கையாக குணமடையும் தன்மை (Healing power) உள்ளது என்பதை நம்மால் உணர முடியும். ஏனெனில் 12 நாட்கள் தொடர்ந்து கடினமான பாயதயை கடந்து செல்வது என்பது ஒன்றும் சாதாரண விஷயம் கிடையாது. நம் உடலை நலமாக பார்த்துக்கொண்டால் அது நமக்கு அற்புதங்களை நடத்திக் காட்டும் என்பதில் எனக்கு சிறிதும் ஐயம் இல்லை.

**உங்களின் அடுத்த சாகசப் பயணம் என்ன?**

இது வரை ஒன்றும் திட்டமிடவில்லை. நல்ல புதிய வாய்ப்பு ஏதேனும் வந்தால் அதை பற்றிக் கொள்வேன்.

எதிர்காலத்தில் யாருக்காவது குறிப்புகள் தேவைப் பட்டால் மக்கள் உங்களைத் தொடர்புகொள்ளலாமா? உங்கள் மின்னஞ்சலை நாங்கள் வெளியிடலாமா?

*eshusan@gmail.com* இதுதான் எனது ஈமெயில். நான் சென்ற ட்ரெக்கிங் நிறுவனத்திற்கு ஈமெயில் செய்தால் கூட அவர்கள் கண்டிப்பாக உதவுவார்கள்: Customized Trekcation Experiences | TrekNomads

இப்பயணத்தைப் பற்றிய முழு விவரங்களை எங்களுக்கு வழங்க, நீங்கள் எடுத்த அனைத்து முயற்சிகளுக்கும் மிக்க நன்றி! "எல்லோரும் மலையின் உச்சியில் வாழ விரும்புகிறார்கள், ஆனால் நீங்கள் அதில் ஏறும் போது எல்லா மகிழ்ச்சியும் வளர்ச்சியும் ஏற்படுகிறது." என்பதைத் தெளிவாகக் கூறியுளீர்கள். *Life is meant for good friends and great adventures* என்ற வாக்கியம் நினைவுக்கு வருகிறது. உங்கள் எதிர்கால சாகசப் பயணத்திற்கு எங்கள் இனிய நல்வாழ்த்துக்கள்!

## சமைக்க ருசிக்க



- மல்லிகா

### குழி பணியாரம்

**தேவையான பொருட்கள்**

பச்சரிசி - 1 கப்

புழுங்கலரிசி - 1 கப்

பாசிபருப்பு - ¾ கப்

உளுந்து - ¼ கப்

வெந்தயம் - ½ தேக்கரண்டி

**செய்முறை:**

பச்சரிசி மற்றும் புழுங்கலரிசியை சேர்த்து ஊற வைக்க வேண்டும்.உளுந்து, பாசிப்பருப்பு மற்றும் வெந்தயம் ஆகியவற்றை ஒன்றாக ஊற விடவும். 8 மணி நேரம் கழித்து இட்லி பதத்திற்கு அரைக்கவும். உப்பு சேர்த்துக் கலக்கி, புளிக்கவிடவும்.

காரப்பணியாரம் :

வெங்காயம், பச்சை மிளகாயைப் பொடியாக நறுக்கவும். வாணலியில் எண்ணெய் சூடாக்கி, கடுகு, உளுத்தம்பருப்பு, கறிவேப்பிலை தாளித்து, வெங்காயம், பச்சை மிளகாய், பொடியாக நறுக்கின தேங்காய் சில் சேர்த்து வதக்கி மாவில் சேர்க்கவும். குழி பணியார சட்டியை சூடாக்கி, சிறிது எண்ணெய் விட்டு, மாவை குழிகளில் ஊற்றி, இருபுறமும் வேகவிட்டு எடுத்தால், சுவையான குழிபணியாரம் தயார்.

இனிப்பு பணியாரம் :

மாவில் கொஞ்சம் பனைவெல்லப்பாகு எடுத்து வடித்து அதனை மாவில் சேர்த்து இனிப்பு பணியாரம் செய்யலாம். இதனுடன் சுக்கு, ஏலக்காய்த்தூள் சேர்த்து செய்வதால், நல்ல வாசனையுடன் இருக்கும்.



தென்னிந்திய உணவு எல்லாமே ஆரோக்கியம் தான். தென்னிந்திய உணவு வகைகளில் பெரும்பாலான உணவுகள் எல்லா நேரத்திலும் பிடித்த தேர்வாக அமைகின்றன. ஒவ்வொரு உணவிலும் சில தனித்துவமான உணவுகள் உள்ளன. அத்தகைய ஒரு சுவையான தென்னிந்திய சிற்றுண்டிதான் குழி பணியாரம்.

## மிளகு பன்னீர் கிரேவி



- மோகனப்ப்ரியா

### தேவையான பொருட்கள்

பன்னீர் - 400 கிராம் (துண்டுகளாக்கப்பட்டது)
எண்ணெய் - 5 டேபிள் ஸ்பூன்
வெங்காயம் – 1-1/2 கப் (பொடியாக நறுக்கியது)
இஞ்சி பூண்டு விழுது - 1 டீஸ்பூன்
நெய் - 1 டேபிள் ஸ்பூன்
பட்டை - 1 இன்ச்
ஏலக்காய் – 2
மிளகு - 4-5
கிராம்பு - 3-4
பிரியாணி இலை – 2
தயிர் - 1 கப்
மிளகாய்த்தூள் - 1 டீஸ்பூன்
மல்லித்தூள் - 2 டீஸ்பூன்
சீரகப்பொடி - 1 டீஸ்பூன்
கரம் மசாலா - 1 டீஸ்பூன்
மிளகுத்தூள் - 3 டீஸ்பூன்
பிரஷ் க்ரீம் - 1/4 கப்
உப்பு - தேவையான அளவு
கொத்தமல்லி – சிறிது

### செய்முறை:

முதலில் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், வெங்காயத்தை சேர்த்து பொன்னிறமாக வதக்கி, இஞ்சி பூண்டு பேஸ்ட் சேர்த்து 2 நிமிடம் வதக்கி, பின் இறக்கி குளிர வைத்து, மிக்ஸியில் போட்டு அரைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு அகன்ற வாணலியை அடுப்பில் வைத்து, அதில் நெய் ஊற்றி காய்ந்ததும், பட்டை, மிளகு, கிராம்பு மற்றும் பிரியாணி இலை சேர்த்து தாளிக்க வேண்டும். பின்பு அரைத்து வைத்துள்ள வெங்காய பேஸ்ட் சேர்த்து வதக்க வேண்டும்.

பிறகு, அதில் தயிரை நன்கு அடித்து ஊற்றி கிளறி விட வேண்டும். அதில் மிளகாய்த்தூள், மல்லித்தூள், கரம் மசாலா, சீரகப்பொடி மற்றும் உப்பு சேர்த்து 3-4 நிமிடம் கிளறி விட வேண்டும்.



பின்னர் பன்னீர், மற்றும் 1 கப் தண்ணீர் ஊற்றி பிரட்டி, வாணலியை மூடி 10 நிமிடம் குறைவான தீயிலேயே கொதிக்க விட வேண்டும். பின் மிளகுத்தூள் மற்றும் பிரஷ் க்ரீம் சேர்த்து, ஒரு நிமிடம் கிளறி விட வேண்டும். ஒரு நிமிடம் கொதித்ததும், அதனை இறக்கி, அதில் கொத்தமல்லியை தூவி அலங்கரித்து, சாதம் அல்லது சப்பாத்தியுடன் சாப்பிட்டால், சூப்பராக இருக்கும்.

## சதுரங்கத்தின் ராஜா பிரக்ஞானந்தா



பாலாஜி சிவக்குமார்

சமீபத்தில் சென்னையில் நடந்து முடிந்த சதுரங்க ஒலிம்பியாட் போட்டியில் இந்திய சதுரங்க விளையாட்டு வீரர்கள் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் வெண்கல பதக்கத்தை வென்று நமது நாட்டிற்கு பெருமை சேர்த்தனர். அப்பேறப்பட்ட செஸ் விளையாட்டில் சாதனைகளை நிகழ்த்திய பல கிராண்ட் மாஸ்டர்களை நாம் கடந்து வந்திருப்போம். ஆனால், தனது சிறப்பான நகர்வுகளால் உலக செஸ் அரங்கில் இந்தியாவிற்க்காக விஸ்வநாதன் ஆனந்திற்கு பிறகு மீண்டும் ஒருமுறை கவனம் ஈர்த்துள்ளார். அவர்தான் 16 வயதுடைய இந்திய கிராண்ட்மாஸ்டர் ரமேஷ்பாபு பிரக்ஞானந்தா.



அவர் கடந்து வந்த பாதையை நாம் இரத்தினச் சுருக்கமாக பார்ப்போமா!!!!

பிரக்ஞானந்தா நம் தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் ஆகஸ்ட் 10, 2005 அன்று பிறந்தார். சிறு வயதில் இவர் தொலைக்காட்சி நிறைய பார்ப்பதை குறைக்கவே, ஏற்கனவே சதுரங்கம் கற்றுக்கொண்டிருந்த இவரின் அக்கா வைஷாலியுடன் இவரையும் இவர் பெற்றோர் சதுரங்க பயிற்சியில் சேர்த்து விட்டனர். அதிலிருந்து இவருக்கு சதுரங்கம் மிகவும் பிடித்து போய், அதில் மிகவும் தீவிரமாக கவனம் செலுத்த தொடங்கினார்.

2013-ம் ஆண்டு நடந்த 8 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக இளைஞர் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில்தான் பிரக்ஞானந்தா தனது முதல் சாம்பியன் பட்டத்தை வென்றார். அவருக்கு 10 வயது (10 மாதங்கள் மற்றும் 19 நாட்களில்) இருந்தபோது 2016ம் ஆண்டு இளைய சர்வதேச மாஸ்டர் பட்டத்தை வென்றெடுத்தார். அவருக்கு 12 வயது (10 மாதங்கள் மற்றும் 13 நாட்களில்) இருந்த போது, அவர் ரஷ்யாவின் செஸ் நட்சத்திரம் செர்ஜி கர்ஜாகினுக்குப் பிறகு இளைய கிராண்ட்மாஸ்டர் என்ற பட்டத்தை வென்றார்.

சதுரங்கம் ஆட தொடங்கியதிலிருந்தே பிரக்ஞானந்தா தனது மானசீக குருவாக ஐந்து முறை உலக சாம்பியன் பட்டம் வென்றவரும்,

இந்தியாவின் முதல் கிராண்ட்மாஸ்டரும், இந்தியாவுக்கு சதுரங்கத்தில் இன்னும் நிறைய பெருமைகளை தேடித்தந்தவருமான விஸ்வநாதன் ஆனந்தைத்தான் மனதில் நினைத்திருந்தார். பிரக்ஞானந்தா சர்வதேச மாஸ்டர் பட்டத்தை வென்ற பிறகு, அதே விஸ்வநாதன் ஆனந்த் இவரை நேரில் அழைத்து வாழ்த்தி இவருடன் சதுரங்கம் விளையாடி மகிழ்ந்தார். இந்த நிகழ்வுக்குப் பிறகு பிரக்ஞானந்தாவுக்கு அவரின் பயிற்சியாளருடன் விஸ்வநாதன் ஆனந்தும் ஆலோசனை தந்து வழிநடத்தி வந்தார்.

நிறைய போட்டிகளில் கலந்து கொண்டு வென்று வந்த பிரக்ஞானந்தாவுக்கு பெரிய மையில்கல்லாக அமைந்தது பிப்ரவரி 2022தில் நடந்த ஆன்லைன் ரேபிட் செஸ் போட்டியில் உலகின் முதல்தர வீரரான மேக்னஸ் கார்ல்சனை தோற்கடித்து அசத்தியது தான். இதன்மூலம் உலக செஸ் அரங்கை மீண்டும் ஒருமுறை தன்பக்கம் கவனம் ஈர்த்து, ஒரு பிரமிப்பான சாதனையை படைத்துக்காட்டினார்.

இதன்பிறகு மறுபடியும் மே 2022ல் நடந்து முடிந்த செஸ்சபிள் ஆன்லைன் போட்டியிலும் அதே கார்ல்செனை இரண்டாம் முறையாக வென்று இவர் முதல் முறை ஜெயித்தது "அதிர்ஷ்டத்ததால்" அல்ல என்பதை நிரூபித்தார். இந்த இரண்டு முறை போதாது என்று மூன்றாம் முறையாக கார்ல்செனை இவர் ஆகஸ்டு 2022ல் நடந்து முடிந்த FTX கிரிப்டோ கோப்பையில் வென்று காட்டி சதுரங்க உலகையே அசர வைத்தார்.

அவர் சதுரங்க உலகில் இன்னும் பல சாதனைகளை செய்ய கொலம்பஸ்சில் உள்ள நம் தமிழர்களின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வோம்.

கடும் உழைப்பும், விடா முயற்சியும் சேர்ந்ததால் தான் பிரக்ஞானந்தாவால் சாதாரண நடுத்தர குடும்பத்தில் பிறந்து, இவ்வளவு தடைகளுக்குப் பிறகும் சதுரங்க உலகில் இவ்வளவு சாதனைகளை படைக்க முடிந்தது என்று சொன்னால் அது மிகையாகாது.



இந்த ஒரு பெரிய வெற்றிக்கு பின்னால் உள்ள அவரின் விடாமுயற்சி, விளையாட்டு வீரர்கள் மட்டுமல்லாமல் வாழ்வில் முன்னேற துடிக்கும் அனைவருக்கும் ஒரு பாடமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

## தமிழர் இனம்



**- இறையழகு**

பிறந்த குழவி இறந்து பிறந்தாலும்
ஊன் பிண்டமாய் உதிரத்தோடு விழுந்தாலும்
போர் வாளால் நெஞ்சில் கீறி அடக்கஞ்
செய்யும் இனம் தமிழர் இனம்

பிணி வந்துறுத்தி ஆவி பிரிந்த அரசருடம்பை
கருப்பையில் வாசம் செய்ததை தருப்பையில்
கிடத்தி "போரிலிறந்த அரசரடையும் உலகை
இவர் அடைக " என்றிறை துதித்து
போர் வாளால் மார்பில் வெட்டி
புதைக்குமினம் தமிழர் இனம்

போரில் பகைவனம்பு நெஞ்சினூடே பாய்ந்து
முதுகிலே நிற்கக் கண்டு புறமுதுகிட்டு
ஓடினான் என்றுலகம் எண்ணுமே
என்றெண்ணி நீங்காப் பழி வருமெனஞ்சி
வடக்கிருந்து உயர்நீத்த இனம் தமிழர் இனம்

போரில் காதற் கணவன் களி தீர்த்தவன்
வீரமரணம் எய்தினன் குலக்கொழுந்து
மகனொருவனும் மாற்றான் படையினரால்
மறைந்திருந்து கொல்லப்பட்டான் தொடரும்
போருக்கு அரசன் படைக்கு ஆளனுப்ப
வீட்டில் ஆணில்லையே என்று தவிக்கும்
அன்னையர் நிறைந்த இனம் தமிழர் இனம்

போரில் தன் மகன் புறமுதுகிட்டு
ஓடிச் செத்தான் எனும் செய்தி கேட்டு மனம்
நைந்து மகன் பால் குடித்த மார்பினை
அறுத்தெறிவேன் என்றுரைத்து கருங்கண்கள்
கனலாய்ச் சிவக்க போர்க்களம் போழ்ந்து
அருமை மகன் மார்பினில் அம்புகள் குத்தி
நிற்கக் கண்டு அகமகிழ்ந்து கனற் கண்களில்
கண்ணீர் வழிய என் மகன் மரணம் வீர மரணம்
என்று கூவி மனம் மகிழ்ந்த அன்னையர்
வாழ்ந்த இனம் தமிழர் இனம்.



எங்க அம்மா சீனி டப்பாவுல உப்புனு எழுதி வெச்சாங்க, ஏன்னு சொல்லுங்க?

ஏன்னா............

எறும்ப ஏமாத்துறதுக்கு...

**<u>சித்திரம்</u>**





**லித்திக்கா பாலாஜி**



**சங்கரேஷ்வரி நெல்லையப்பன்**







அத்விகா மாரம்பேடு



## ***அறிவீர் ! அறிவீர் !!***



**- இறையழகு**

உண்டென்று அறிவீர் !
உண்டென்று அறிவீர் !!

எல்லோருக்கும் தெய்வமொன்று
உண்டென்று அறிவீர்
மதம் பிடித்த
மதங்கள் வேண்டாமென்று அறிவீர்
சனி பிடித்த
சாதிகள் வேண்டாமென்று அறிவீர்
சகத்தினில்
நல்ல சனங்கள் உண்டென்று அறிவீர்

பசித்தோர் உணவில் தெய்வம் உண்டென்று
அறிவீர்
படித்தோர் நாவில் தெய்வம் உண்டென்று
அறிவீர்
உழைத்தோர் உழைப்பில் தெய்வம்
உண்டென்று அறிவீர்
அருளோடு
தொழுதோர் உள்ளத்தில் தெய்வம்
உண்டென்று அறிவீர்

பெய்யும் மழையில் தெய்வம் உண்டென்று
அறிவீர்
நிற்கும் மலையில் தெய்வம் உண்டென்று
அறிவீர்
அடிக்கும் காற்றில் தெய்வம் உண்டென்று
அறிவீர்
மணக்கும் வண்ண மலர்களில் தெய்வம்
உண்டென்று அறிவீர்

மரம் செடி கொடிகளில் தெய்வம்
உண்டென்று அறிவீர்
மனிதர்களில் தெய்வம் உண்டென்று அறிவீர்
அம்மையும் அப்பனும் தெய்வமென்று
அறிவீர்
உம்முள் உறையும் தெய்வத்தை அறிவீர்.

உண்டென்று அறிவீர் !
உண்டென்று அறிவீர் !!

ஒருத்தன் தினமும் இரவில்
தலைக்கு அடில dictionary book
வெச்சு தூங்குறானாம் ஏன் ?



விடை: ஏன்னா அவனுக்கு
தினமும் நைட் அர்த்தமில்லாத
கனவு வருதாம்

## இறைவன்



மலர்விழி மணியம்

“மானுடா... மானுடா...” என்று யாரோ அழைக்கும் குரல் கேட்க,

“யாருப்பா அது இந்த நடுராத்திரியில??” என்று புரண்டு படுத்த மானுடன் சற்று கண் முழித்துப் பார்த்து அதிர்ச்சியானார்.

உடல் இடது புறமாக அசையாமல் இருக்க, தன் ஆன்மா மட்டும் வலது பக்கம் திரும்பி இருப்பதைக் கண்டு பயந்து எழுந்தார்.

"ஹலோ மானுடா..” என்ற குரல் வந்த திசையை நோக்கித் திரும்பிய மானுடன் முன் ஷார்ட்ஸ் டி.சர்ட் மற்றும் தலையில் **‘எமன்’** என்று பொறிக்கப்பட்ட தொப்பியும் அணிந்து ஒருவர் அமர்ந்திருந்தார்.

“நீ... நீ... நீங்க யாரு?"

“ஏம்ப்பா, கொட்ட எழுத்துல என் தொப்பில **எமன்**-னு எழுதியிருக்கு? அப்புறமும் யாருன்னு கேக்குறியே பா?”

"எமனா??!!!... எமன்னா பெரிய கதை , பெரிய மீசை, தலையில் கிரீடம் எல்லாம் இருக்குமே?”

“ம்... ஐ அம் அப்கிரேடட்... வெர்ஷன் 15.0” என்ற எமனின் பதிலைக் கேட்டு,

“ஆ” என ஒரு கணம் வாய் பிளந்த மானுடன்,

“சரி. என்ன விஷயமா, இந்த நடு ராத்திரியில் வந்தீங்க?” என்று கேட்டுக் கொண்டே கனவாக இருக்குமோ என்ற ஐயத்தில் தன்னையே கிள்ள முயன்றார். ஆனால் உடல் பிடிபடவில்லை.

"உங்களக் கூட்டிட்டுப் போலாமுனு தான் வந்தேன்.”

“எ... எ... எங்க?”

“பூமியில உங்க வேலை முடிந்தது. சோ சொர்க்கத்துக்குக் கூட்டிட்டுப் போலாம்னு வந்தேன். போலாமா?"

சற்று யோசித்து விட்டு கட்டிலில் இருந்து கீழே இறங்கிய மானுடன், தன் குடும்பத்தாரின் புகைப்படம் தாங்கிய போட்டோ ப்ரேமை ஒரு கணம் பார்த்துவிட்டு,

"அப்போ நான் செத்துட்டனா?" என கேட்டார்.

"ஹே, கம் ஆன் மானுடா. உங்க உடலுக்குத் தான் முடிவு, உங்க ஆன்மாவுக்கு இல்ல. சீக்கிரம் வாங்க, வெளியில குதிமான் வெயிட்டிங்”.

மானுடன் வாய் திறக்கும் முன்,
“வெளிய வந்தா குதிமான் யாருன்னு தெரியும்.” என்றார் எமன்.

“ம்.” என்று எமனோடு கிளம்பினார் மானுடன்.

வெளியே குதிரையும், மானும் கலந்த உருவமாக ஒரு விலங்கு நின்று கொண்டிருந்தது. உருவமே சொன்னது அதற்கு ஏன் குதிமான் என்ற பெயர் என்று.

யாரையோ தேடுவது போல மானுடன் சுற்றும் முற்றும் பார்க்க,

“யாரத் தேடுறீங்க?” என எமன் கேட்டார்.

“சித்ரகுப்தரக் காணோமேன்னு...”

“சித்குப்தனுக்கு, கொரோனா, குவாரண்டைன்ல இருக்காரு.” என பரிகசித்தார் எமன்.

மிகவும் பாவமாக மானுடன் பார்க்க,

“சும்மா விளையாட்டுக்கு சொன்னேன். இந்தக் கதையில நான் தனியாத் தான் வரேன். குதிமான் ரெண்டு பேர் வெயிட்ட தான் தாங்கும். வாங்க போலாம்” என்று கட்டளையிட குதிமான் மேல் ஏறிக்கொண்டார் மானுடன்.

செல்லும் வழியில் மிகவும் அமைதியாக வந்தார் மானுடன். மனதில் ஒரே வலி. தான் நடத்தும் அனாதை இல்லத்தில் வசிக்கும் பிள்ளைகளை நினைத்து வருந்தினார், தன் குடும்ப உறுப்பினர்களையும் நினைத்துப் பார்த்தார், தன் குடியிருப்பின் வாசலில் எப்போதும் ஓடி ஆடிக் கொண்டிருக்கும் நாய்க் குட்டியை எண்ணி வாடினார், இனி யார் அதற்கு உணவு கொடுப்பார்கள் என்று, தன் வீட்டு மரத்தடிக்கு வரும் சிட்டுக்குருவியை நினைக்க முற்படும் பொழுது,

“அய்யய்யே..... போதும் மானுடா.. சும்மா தேவையில்லாம கவலைப்படாதீங்க. அவங்க அவங்க பார்த்துப்பாங்க அவங்க லைஃப்ப. ரொம்ப புலம்பாதீங்க” என்று எமன் தடுத்தார்.

“எப்படி நான் என் மனசுல நெனச்சது உங்களுக்கு....?” என்று கேட்டுவிட்டு, எமனின் பதிலை எதிர்பாராமல்,

“ஓகே ஓகே. நீங்க தான் எமன் ஆச்சே” என்று அவரே கூறிக்கொண்டார்.

“ஹி ஹி” சிரித்தார் எமன்.

சொர்க்கம் வந்ததும் குதிமான் நின்றது. எமனும் மானுடனும் கீழே இறங்கினர். சொர்க்க வாசலை நோக்கி நடக்க முற்படும் பொழுது,

" மானுடா எனக்கு ஒரு ஹக் குடுத்துட்டுப் போங்க” என்று ஒரு குரல் கேட்க திரும்பிப் பார்த்து அதிர்ச்சியான மானுடன்,

“வி.. விலங்கு.. பே... பே... பேசுது...” என்று பிதற்றினார்.

“ஆமா இங்க எல்லோருமே பேசுவோம்” என்ற குதிமானிற்கு ஒரு ஹக் கொடுத்து விட்டு சொர்கத்திற்குள் சென்றார்.

உள்ளே சென்றவர் வாய்பிளந்து நின்றார். உலகில் உள்ள அத்தனை நறுமணப் பூக்களின்

ஒன்று கூடிய வாசனை. இடப்புறமும் வலப்புறமும் நீண்ட வரிசையில் நிறைய அறைகள். நடுவே சிவப்புக் கம்பளம், ஆரம்பம் தெரிகிறது ஆனால் அந்த கம்பளத்தின் முடிவு கண்களுக்கு எட்டவில்லை. மிகவும் பரபரப்பாக அங்கும் இங்கும் பறந்து கொண்டிருந்தனர் ஆண் தேவதைகளும் பெண் தேவதைகளும்.

" மானுடா.." என்று தோளைத் தொட்டார் எமன் .

"சொர்க்கம் இவ்வளவு பெரியதா?? "என்று மானுடன் கேட்டார்.

"ம்... ம் ஆமாமா. சரி வாங்க, உங்க வேலை என்னன்னு நான் விளக்குறேன்." என்று அங்கேயிருந்த பல்லாயிரக்கணக்கான அறைகளில் ஒரு அறையின் முன்பு அழைத்துச் சென்றார்.



அந்த அறையின் முன்பு இரு பெட்டிகள் இருந்தன. ஒன்றின் மேல் "நன்மை" என்றும் மற்றொன்றின் மேல் "தீமை" என்றும் ஒட்டப்பட்டிருந்தது.

'என்ன?', என்பது போல் பார்த்த மானுடனிடம்,

"இதெல்லாம் பூலோக மக்களோட வேண்டுதல்கள். நன்மை, தீமை, ரெண்டுல ஒன்னு தான கடவுள்கிட்ட வேண்டுவாங்க" என்றார் எமன்.

"சரி அத ஏன் பிரிச்சு வச்சிருக்காங்க?"

" நீங்க இந்த நன்மை விண்ணப்பங்கள எல்லாம் கடவுள் கிட்ட கொண்டு சேர்க்கணும் " எமன் கூற,
"அப்போ தீமை?" என்று அவசரமாக மானுடன் கேட்க,

"கேட்டவனுக்கே போய் சேரும். பூமராங் மாதிரி" என்றார் எமன்.

"ஓ.. இந்த நன்மை விண்ணப்பங்கள நான் எப்போ கொண்டு போகனும் கடவுள் கிட்ட?"

"இப்பயே போங்க. எப்போ எல்லாம் இந்த பெட்டி நெறையுதோ எடுத்துட்டுப் போங்க"

"கடவுள் எங்கே?"

"அதோ அந்த என்டுல. இந்த சிவப்புக் கம்பளத்தோட முடிவுல ஒரு பெரிய அறை இருக்கு. அதான் கடவுளோட அறை"

எமன் கைநீட்டிய திசையில் சிவப்புக் கம்பளத்தின் முடிவே தெரியவில்லை.

“ரொம்ப தூரமா இருக்கும் போலயே. குதிமான் கூட்டிட்டுப் போகுமா என்னய?”

“ம்…??” என்று மானுடனை ஏற இறங்கப் பார்த்த எமன், "உங்களுக்கு இறக்கை முளைக்குற வரைக்கும் நீங்க நடந்து தான் போகணும்.” என்றார்.

“எப்போ எனக்கு இறக்கை முளைக்கும்?”

“நீங்க கடவுளக் கண்டவுடனே” என்று கூறிய எமன், “சரி சரி.. நான் உங்கள அப்புறம் பாக்குறேன், எனக்கு நிறைய வேலை இருக்கு” என்று விடைபெற்றார்.

எமன் சென்றதும் நன்மை பெட்டியைத் தூக்கிக் கொண்டு நடைபோட ஆரம்பித்த மானுடன், ‘இன்னைக்கு இந்த ஒரு தடவை தான் நடக்கணும். இந்தப் பெட்டியக் கொடுத்துட்டு கடவுளப் பார்த்துட்டா, இறக்கை முளச்சிடும், அப்புறம் பறந்து வரவேண்டியது தான்’. என்று தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டு நடை போட்டார்.

நம் மணிக் கணக்கின்படி ஒரு பத்து மணி நேரம் ஆகியிருக்கும், கடவுளின் அறையை அடைந்தார் மானுடன்.

கதவைத் தட்ட முயற்சித்தார், ஆனால் கதவு தானாகவே திறந்தது. உள்ளே சென்றவுடன் பளீர் என்ற மஞ்சள் நிற ஒளி நிறைந்து இருந்தது. கண்கள் இரண்டும் கூச இரு கண்களையும் மூடிக் கொண்டு பெட்டியை நின்ற இடத்திலேயே வைத்துவிட்டு வெளியே ஓடி வந்தார்..

தன் முதுகைத் தடவிப் பார்த்தார் இறக்கை முளைத்ததா என்று. அப்படி ஒரு உணர்வும் இல்லை. ”ஹூம்ம்..” என்ற பெருமூச்சுடன் தனக்குக் கொடுக்கப்பட்ட அறையை நோக்கி நடைபோட்டார். பல மணி நேரங்கள் கழித்து வந்தடையும் போது அடுத்த பெட்டி நிறைந்திருந்தது.

பெட்டியை எடுத்துக் கொண்டு கடவுளின் அறையை நோக்கி நடை போட்டார். இம்முறையும் கடவுளைக்காண முயற்சிக்கும் பொழுது, மஞ்சள் ஒளி கண்களைக் கூச வெளியே ஓடி வந்தார். தன் முதுகைத் தடவிப் பார்த்தார் இறக்கை முளைத்ததா என்று.. முளைக்கவில்லை...

திரும்பி அறையை நோக்கி நடக்கும் தூரத்தை நினைக்கும் பொழுது சலிப்பாக இருந்தது. கால்கள் கடுக்க ஆரம்பித்தது. சற்று நிதானித்து விட்டு, இன்று கடவுளைக் காணாமல் போவதில்லை என்ற முடிவோடு மீண்டும் கடவுளின் அறைக்குள் நுழைந்தார். இம்முறை நுழையும் முன்னமே, கண்களை மூடிக் கொண்டே சென்றவர்,

தாம் வணங்கும் தெய்வத்தின் பெயரை அழைத்தார்...
பதில் இல்லை.

தம் நண்பன் வணங்கும் தெய்வத்தின் பெயரை அழைத்தார்...
பதில் இல்லை.

தம் அண்டை வீட்டார் வணங்கும் தெய்வத்தின் பெயரை அழைத்தார்... பதில் இல்லை.
"அடக் கடவுளே!" என்று சலித்துக் கொண்டார்.

"என்ன மானுடா ??!!!" என்று கடவுள் குரல் கேட்க, "சாமி" என்று அழைத்து கண்களைத் திறக்க முயன்றார் மானுடன். மீண்டும் மஞ்சள் ஒளி கண்களைக் கூச விழிகளை மூடிக்கொண்டார்.

"சாமி.. ஏன் என்னால உங்களப் பார்க்க முடியல?" என்று ஏக்கத்தோடு மானுடன் கேட்க,

"எனக்கு உருவமே இல்லையப்பா. எனக்கு உருவமும் பெயரும் மக்கள் நீங்கள் கொடுத்ததுதானே. என்னை என்னவாக உனக்குக் காண வேண்டும் என்று நினைக்கிறாயோ உன் அகக்கண்களால் உன்னுள் கடந்து சென்று பார். கட - உள். நான் அங்கு தெரிவேன்."என்றார்.

இருக மூடிய கண்களோடு, தான் விரும்பும் உருவத்தில் அகக் கண்களால் தன்னுள் கடவுளைக் கண்டு, விழிகளில் நீர் வழிந்தது மானுடனிற்கு. தன் முதுகில் ஏதோ வித்தியாசமான ஒரு வலி உண்டாயிற்று..

கண்கள் மூடிய வண்ணம், "நீங்கள் எந்த மதத்தின் கடவுள்?". என்று மானுடன் கேட்க,

"ஹ..ஹ..ஹ.. நான் அனைவருக்கும் பொதுவான கடவுள். நான் உங்கள் எல்லோரின் உள்ளும் இருக்கிறேன். அதை உணராமல் என்னை வெளியே தேடி அலைகிறீர்கள்.எந்த மதம் சார்ந்தும் நான் இல்லை. என்னை சார்ந்து நீங்கள் வாழ்ந்து மனிதம் வளர்க்கச் சொன்னேனே அன்றி என்னை பிரித்து வகுக்கச் சொல்லவில்லை. " என்றார்.

மேலும் கண்ணீர் கசிந்தது மானுடனிற்கு. கால்கள் தரையிலிருந்து ஒரு அடி மேலே செல்ல, காற்றில் மிதப்பது போல உணர்ந்தார் மானுடன். ஆனால் கண்களைத் திறக்க முயற்சிக்கவில்லை..

கடவுள் தொடர்ந்தார்,
"உங்களுக்குள் கடந்து சென்று நன்மைக்கு மட்டும் தீனி போட்டு நற்குணங்களை விதையுங்கள், உங்களை சுற்றி இருக்கும் பிற உயிர்களுக்கும் நன்மைகளையே செய்யுங்கள் உங்களுக்குள் கடவுளாக நான் வாழ்வேன் என்றென்றும்." என்றார்.

உன்னதமான இந்த விளக்கத்தை கேட்டு கடவுளை உணரும் பொழுது மிதந்து கொண்டிருந்த மானுடனுக்கு, இறக்கைகள் இரண்டும் முழுவதுமாக வளர்ந்து தேவதை ஆனான்..

## தமிழ்ச் சங்க நிர்வாகக்குழு

### ஆலோசனைக்குழு



**சந்தியா சரவணண்**



**பிரியதர்ஷினி செல்வராஜ்**



**கார்த்திக் முருகேசன்**

### செயற்குழு



**தனசீலன் காளிமுத்து**

தலைவர்



**மதிவதனி சாந்தி-ஈஸ்வரன்**

செயலாளர்



**அன்னலட்சுமி தேவசுந்தரம்**

பொருளாளர்



**ஜெகதீஸ்வரன் கணேசன்**

மக்கள்தொடர்பு ஒருங்கிணைப்பாளர்



**லாவண்யா ராமு**

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்



**சிவசங்கரி கணேஷ்**

போட்டி ஒருங்கிணைப்பாளர்



**வினோத் ராஜ் சுந்தரம்**

தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்



**காயத்ரிதேவி**

தகவல் தொடர்பு ஒருங்கிணைப்பாளர்



**பழனிவேல் குப்புசாமி**

விளையாட்டு ஒருங்கிணைப்பாளர்

## சாரல் ஆசிரியர் குழு


சிவக்குமார் ராஜு


ஜெகதீஸ்வரன் கணேசன்


மதிவதனி சாந்தி-ஈஸ்வரன்


பத்மா முத்துகுமார்


மோகனப்ரியா


வினோத் ராஜ் சுந்தரம் பாபு


ஷைனி அஜி வேலுசாமி


ஜானு இசக்கிராஜ்மோகன்


சத்தியமூர்த்தி தங்கராசு


ரம்யா சிவசுப்ரமணியன்


பாலாஜி சிவக்குமார்


நடராசன்

## வடிவமைத்தோர் குழு


சிவசங்கரி கணேஷ்


லாவண்யா ராமு


காயத்ரி தேவி முத்து

# சரிபார்த்தோர் குழு



பழனிவேல் குப்புசாமி



ரம்யா

# நன்றி!





SVTCO
Suneetha Ravindran
614-209-7846
NATIYALAYAM
DANCE SCHOOL




Divine joy is experienced through the joy of dancing
2000
Kalabavanam
கலாபவனம்
Priya Gajaananan
www.kalabhavanam.com
(614) 570 3318
கலை இன்பமே இறை இன்பம்




Spice9
Flavors of India
Indian Restaurant
Order Online @ www.spice9columbus.com
(614) 505-3477
8631 Sancus Blvd, Columbus, OH




AllStates CPA
A Rammohan & Associates Company
The power to make a difference,
the people to make it count.
Nataraja Rammohan CPA
614-516-0070
Vasumathi Varadarajan CPA
614-516-0064
Saran K. Palaniswamy
614-516-0066
Tax Planning & Preparation
Tax Problems
Small Business Accounting
New Business Formation
International Taxation
Foreign Bank Account Reporting
Payroll Solutions & 1099s processing
Business Valuation
Business Succession Planning
IRS Audit Representation
QuickBooks Setup and Training
Part Time CFO Services
6660 N. High Street, Suite 1 H
Worthington, OH 43085
614 854 0850
AICPA
www.AllStatesCPA.com
For latest news and resources visit our website or
download our free app "AllStates CPA"




Arthi Prem
SUBSCRIBE


மீண்டும் வருகிறது பறை பயிற்சிப் பட்டறை.
தமிழ் பாரம்பரிய கலையான பறையை
கற்றுக்கொள்ள ஒரு அறிய வாய்ப்பு. தவறாமல்
பதிவு செய்யுங்கள்
Workshop Dates: Nov 19th & 20th. (9AM ET to 6 PM ET)
Weekday sessions will be conducted from Nov 14th to 18th in the evenings (Tentative time - 6 PM ET to 8 PM ET.
Venue – Genoa Township Hall
5111 South Old 3C Highway,
Westerville, OH 43082